PUBLIC LIBRARY
JAFFNA

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர் : 139 இதழ் : 13 பக்கங்கள் : 08 திகதி : 19.07.2015 விலை : 20.00

# தங்கள் வாழ்வை வீணடிக்கும் இளையோர் நமக்குத் தேவையில்லை

## பராகுவே விஜயத்தின் போது திருத்தந்தை இளையோருக்கு அறிவுரை



திருத்தந்தை தனது இலத்தீன் அமெரிக்க விஜயத்தின் போது பராகுவே நாட்டு இளைஞர்களைப் பார்த்து மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறிய அறிவுரைகள்: இக்கால எதிர்மறைக் கலாசாரத் தாக்கத்திற்கு எதிராகச் சென்று சுதந்திரமான இதயத்துடன் இயேசுவுக்காக வாழுங்கள். தங்கள்வாழ்வை வீணடிக்கும் இளையோர் நமக்குத் தேவையில்லை. நம்பிக்கையோடு வாழும் இளையோர் நமக்குத் தேவைப்படுகின்றனர். ஏனெனில் அவர்கள் இயேசுவை அறிந்துள்ளனர் மற்றும் சுதந்திரமான இதயத்தைக் கொண்டிருக்கின்றனர். சுதந்திரம் என்பது, இறைவன் நமக்கு இலவசமாக வழங்கும் கொடை. ஆனால், அதை எப்படிப் பெறுவது என்பதை அறிந்திருக்க வேண்டும். நாம் விடுதலையடைந்த ஓர் இதயத்தைக் கொண்டிருக்க வேண்டும். போதைப்பொருளுக்கு அடிமையாதல், சோகம் ஆகியவை நம் சுதந்திரத்தை நம்மிலிருந்து அகற்றி விடும். நம் இதயத்தை நிறைக்கக் கூடிய உண்மையான மகிழ்ச்சி, விதம்விதமாய் ஆடை அணிவதிலோ, புகழ்பெற்ற நிறுவனங்கள் தயாரித்த விலையுயர்ந்த காலணிகளை வைத்திருப்பதிலோ அல்லது புதுப்புது வடிவங்களில் நகைகளால் உடலை அலங்கரிப்பதிலோ இல்லை, மாறாக, உண்மையான மகிழ்ச்சி, பிறரை நம் அருகில் ஈர்ப்பதில், அழுவாரோடு அழுவதில், சோர்வடைந்து துன்பத்தில் இருப்பவர்க்கு ஆறுதலாக அருகில் இருப்பதில், பிறர் கண்ணீர் சிந்துவதற்கு நம் தோள்களை அளிப்பதில், அவர்களை அன்போடு அணைத்து முத்தமிடுவதில் உள்ளது. கண்ணீர் சிந்துபவரோடு சேர்ந்து

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## ஆயராகத் திருநிலைப்படுத்தும் சடங்கு




திருகோணமலை மறைமாவட்டத்திற்கு புதிய ஆயராக நியமிக்கப்பட்ட அதி. வண. அருட்பணி. கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அடிகளாரின் ஆயர் திருநிலைப்படுத்தல் சடங்கு இம்மாதம் 25ம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்குத் திருகோணமலை தூய சூசையப்பர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

# நான் இப்போது அமைதியாக இறப்பேன்

## - திருத்தந்தையைச் சந்தித்த சேரிப்பகுதி மூதாட்டி -

பரகுவாய் நாட்டிற்கான மூன்று நாள் திருத்தூதுப் பயணத்தின் நிறைவு நாளான இஞ்ஞாயிறு காலை முதல் நிகழ்ச்சியாக, பரகுவாய் தலைநகர் அசுன்சியோன் நகரின் Banado Norte சேரிப் பகுதிக்குச் சென்றார் திருத்தந்தை பிரான்சிஸ். பரகுவாய் ஆற்றங்கரையில் அமைந்துள்ள இச்சேரியில் வாழும் ஏறக்குறைய 15 ஆயிரம் குடும்பங்கள் அவ்வாற்றில் அடிக்கடி ஏற்படும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்படுகின்றன. பல சமயங்களில் சகதியும் தண்ணீரும் நிறைந்து மக்கள் நடமாடுவதற்கே இயலாத இடமாக இது இருக்கும். அப்பகுதியில் மொத்தம் 13 ஆலயங்கள் உள்ளன. இவற்றில் இயேசு சபையினர் நடத்தும் திருமுழுக்கு யோவான் ஆலயமே மிகப் பெரியது. இச்சேரியின் திருக்குடும்பப் பங்கில் ஏறக்குறைய ஒரு இலட்சம் மக்களைச் சந்தித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இந்நிகழ்வில் முதலில் அச்சேரியிலிருந்து இருவர், வறுமை மற்றும் சமூக அநீதிகளால் இச்சேரி மக்கள் எதிர்நோக்கும் துன்பங்களைப் பகிர்ந்து கொண்டனர். சேரி வாழ் சிறார் திருத்தந்தைக்கு ஒரு தொப்பியை அணிவித்தனர். திருத்தந்தை அவ்விடத்தில் ஒலிவ மரக் கன்று ஒன்றை நட்டார். Banado Norte சேரியில் உரையாற்றிய திருத்தந்தை, சேரி மக்கள் ஒன்றிணைந்து தங்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். Banado Norte சேரியில் இச்சந்திப்பை நிறைவு செய்து திருத்தந்தை திரும்புகையில், பலர் அவரைத் தொடுவதற்கு முயற்சித்தனர். இச்சேரியில் 1952ம் ஆண்டில் குடியேறிய 82 வயது Francisca de Chamorra என்ற மூதாட்டி, நான் இப்போது அமைதியாக இறப்பேன். சகதி நிறைந்த இந்த இடத்திற்குத் திருத்தந்தை



வருகை தந்தது ஒரு புதுமை என்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். இத்தகைய வறிய மக்கள்மீது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வைத்திருக்கும் அன்பை, அவர், திருத்தந்தையாகப் பொறுப்பேற்பதற்கு முன்னும், அப்பணியை ஏற்ற பின்னரும் பல தெளிவான பிறரன்புச் செயல்களால் திருத்தந்தை காட்டி வருகிறார் என நாம் குறிப்பிடத் தேவையில்லை.

# மருதமடு மாதாவே! மனுக்குலத்தின் தாயாரே! நெஞ்சைவிட்டகலாத மரியன்னை கீதம்

இயற்றி இசை அமைத்தவர்

**காலஞ்சென்ற திரு. யோசப் அன்ரூ**

யாழ். அடைக்கல அன்னை ஆலயம்



கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக மடுத்திருப்பதியின் கீதமாகத் தமிழிலும், (சிங்களத்திலும்) பாடப்பட்டுவரும் "மருதமடு மாதாவே! மனுக்குலத்தின் தாயாரே!" என்னும் நெஞ்சைவிட்டகலாத மரியன்னை கீதத்தை இயற்றி இசை அமைத்த பெருமை யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தைச் சேர்ந்த திரு. யோசப் அன்ரூ அவர்களையே சாரும்.

1950களின் ஆரம்பத்தில் மருதமடு அன்னையின் திருச்சுரூபம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்ட போது யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தரிசனத்தின்போது பாடுவதற்காக இப்பாடல் திரு. யோசப் அன்ரூ அவர்களால் உருவாக்கப்பட்டுப் பாடப்பட்டது. இப்பாடல் வரிகளும் இசையும் மருதமடு அன்னையின் பக்தர்களை வெகுவாகக் கவர்ந்து எல்லாராலும் விரும்பிப் பாடப்பட்டு வந்ததால் எமது முன்னாள் ஆயர் மறைந்த பேரருட்திரு ஜே.எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்கள் இப்பாடலை மருதமடுத் திருப்பதியின் முக்கிய கீதமாக அங்கீகரித்தார். இன்று உலகெங்குமுள்ள மடுஅன்னை பக்தர்களால் இப்பாடல் உணர்வு பூர்வமாகப் பாடப்பட்டு வருகின்றது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# குழந்தை மற்றும் கட்டாயத் திருமணத்துக்கு ஐ.நா. தடை

குழந்தை மற்றும் கட்டாயத் திருமணங்கள் நடத்துவது மனித உரிமை மீறல்கள் என்று சொல்லி, அவற்றை நிறுத்துவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் அவை அழைப்பு விடுத்திருப்பதை வரவேற்றுள்ளனர் மனித உரிமை ஆர்வலர்கள்.

குழந்தை மற்றும் கட்டாயத் திருமணங்கள் உலகின் நிலையான வளர்ச்சிக்குத் தடையாக இருந்து வறுமையை நிரந்தரமாக்குகின்றன என்று இவ்வியாழனன்று ஐ.நா. மனித உரிமைகள் அவை கூறியது.

இத்தகைய திருமணப் பழக்கங்களை ஒழிப்பதற்கு நாடுகளில் தேசிய அளவில் செயல்திட்டங்கள் அவசியம் எனக் கூறிய ஐ.நா. அவை, பெண்களும், சிறுமிகளும் தங்களின் பாலியல் வாழ்வு பற்றிச் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் தீர்மானம் எடுப்பதை அரசுகள் உறுதி செய்ய வேண்டுமெனக் கேட்டுள்ளது.

குழந்தைத் திருமணங்களைத் தடுப்பதற்கு நாடுகள் நடவடிக்கை எடுக்காவிட்டால், 2050ம் ஆண்டுக்குள் 120 கோடிச் சிறுமிகள் திருமணம் செய்து வைக்கப்பட்டிருப்பார்கள் என்று, சிறுமிகள் மணப்பெண்கள் அல்ல என்ற அமைப்பின் இயக்குனர் இலட்சுமி சுந்தரம் அவர்கள் கூறினார்.

குழந்தைத் திருமணத்தால் ஒவ்வோர் ஆண்டும் ஏறக்குறைய ஒரு கோடியே ஐம்பது இலட்சம் சிறுமிகள் பாதிக்கப்படுகின்றனர்.

ஐ.நா.வின் இத்தீர்மானத்திற்கு 85க்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

## அருட்தந்தை S.A. ஜோர்ஜ் அடிகளாரின் தாயார் காலமானார்

கிளிநொச்சிப் பங்குத்தந்தை அருட்தந்தை S.A. ஜோர்ஜ் அடிகளாரின் அன்புத் தாயார் திருமதி சூசை யக்கோவா அவர்கள் கடந்த 10.07.2015 அன்று இறைவனடி சேர்ந்தார். அடிகளாருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் பாதுகாவலன் தன் அனுதாபங்களையும் செபங்களையும் தெரிவிக்கிறது.

# யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி இலங்கையின் முதலாவது கத்தோலிக்க ஆங்கிலப் பாடசாலை

1850 ம் ஆண்டு கத்தோலிக்க ஆங்கில ஆண்கள் பாடசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் புனித பத்திரிசியார் கல்லூரி எனப் பெயர்பெற்று தற்போது 165 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிதான் இலங்கையின் முதலாவது கத்தோலிக்க ஆங்கிலப் பாடசாலையாகும். சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய XXV Years' Catholic Progress, The Diocese of Jaffna Under the Episcopate of Dr. Henry Joulain, O.M.I. 1893 -1918 என்ற நூலின்




337ம் பக்கத்தில் இப்பதிவு தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்லூரியின் 150வது ஆண்டு மலரில் அருட்தந்தை விக்ரர் பிலேந்திரன் அடிகள் எழுதிய

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏமது ஏன்னும்

# குற்றவாளிக் கூண்டில் நிற்கும் கையடக்கத் தொலைபேசிகள்

ஒரு குருவானவரின் அனுபவம் இது: "அண்மையில் ஒருவரைச் சந்திப்பதற்காக வீதியோரமாக உள்ள அவருடைய இல்லத்தின் வாசலில் எனது மோட்டார் சைக்கிளில் இருந்தவாறு காத்துக்கொண்டிருந்தேன். அவர் வெளியே வந்து என்னை சந்திப்பதற்கு சற்றுத் தாமதமாகும் என்று தெரிந்ததால் எனது கையடக்கத் தொலைபேசியியை எடுத்து அதில் நான் பதிவேற்றியிருந்த குருக்கள் செபிக்கும் திருப்புகழ் மாலை (Divine Office) என்னும் செபத்தை எடுத்து அந்நேரத்துக்கான செபத்தைச் சொல்லிக்கொண்டிருந்தேன். அவ் வேளையில் அவ்வழியால் சில இளைஞர்கள் துவிச்சக்கரவண்டியில் என்னைக் கடந்து போனார்கள். அவர்கள் போகின்றபோது சொல்லிக்கொண்டு போன வார்த்தைகள் எனது செவிகளுக்குத் தெளிவாகக் கேட்டன: "உங்க பாரடா. பாதர் போனோட மினக்கெடுறார்... பாதர் எங்களுக்கும் காட்டுங்கோ..."

கையடக்கத் தொலைபேசி ஒரு தீமையான பொருள் என்று முத்திரை குத்தப்படும் அளவுக்கு அதன் கடந்த காலப் பாவனைகள் இருந்திருக்கின்றன என்பதையே இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நல்ல, புனிதமான உறவுகளை வளர்க்க, விசுவாச செயற்பாடுகளை மேற்கொள்ள, கல்வி அறிவை, பொது அறிவைப் பெற, உலக நடப்புக்களை அவ்வப்போது அறிந்துகொள்ள, திடகாத்திரமாகப் பொழுதைக் கழிக்க மிகவும் சிறந்த ஒரு கருவியாப் பல புதிய தொழில் நுட்பங்களோடு வெளிவரும் கையடக்கத் தொலைபேசிகள் அவற்றின் சிறப்பை, மதிப்பை, இழந்து இன்று பல தீமைகளின் அடிப்படைக் காரணமாக மாற்றப்பட்டுள்ளதானது மிகவும் துரதிஷ்டமானதும் கவலைக்குரியதுமான விடயமாகும்.

கையடக்கத் தொலைபேசிகள் தாங்கியுள்ள ஏராளமான நன்மைகளைப் புறக்கணித்துவிட்டு எந்த அளவுக்கு அவற்றைத் தீமையான விடயங்களுக்கும், பாவ செயற்பாடுகளுக்கும், ஒழுங்கற்ற உறவுகளைப் பேணுவதற்கும், அநீத பொழுதுபோக்குகளுக்கும் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு அவற்றைப் பயன்படுத்த முற்படுவதன் காரணமாகவே இன்றைய சமூகத்தில் பல தீமைகளும், கலாசாரச் சீரழிவுகளும் மலிந்து கிடக்கின்றன. இன்றைய இளம் சமுதாயம் உட்பட பலர் தமது வாழ்வின் இலட்சியங்களைத் தொலைத்துவிட, இறைவன் தம் வாழ்வில் கொண்டிருக்கின்ற திட்டங்களைத் தூக்கி எறிந்து புறக்கணித்துவிட, தமது தனிப்பட்ட வாழ்விலும் தம் குடும்பங்களிலிலும் கொண்டிருந்த அமைதியை இழந்துவிட கையடக்கத் தொலைபேசிகளின் இத்தீய பயன்பாடுகள் காரணமாக இருந்திருக்கின்றன, இருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை.

இத்தருணத்திலே, நம் முன்னாலுள்ள ஒரு பெரிய சவால் என்னவென்றால், கையடக்கத் தொலைபேசிகள் தீமையானவை என்று அவை ஏற்கனவே பெற்றுவிட்ட இந்தக் கெட்ட பெயரை நீக்கி, அவை நன்மையானவை, தேவையானவை, அதன் பயன்பாடுகள் ஆச்சரியத்தக்க நன்மைகளை விளைவிக்கும் என்ற நல்ல பெயரை அவற்றுக்குப் பெற்றுக் கொடுக்கவேண்டியதேயாகும். எம் எல்லார் முன்னிலையிலும் இப்பெரிய சவால் வைக்கப்பட்டுள்ளது. கையடக்கத் தொலைபேசிகள் இல்லாத ஒரு எதிர்காலத்தை நாம் கற்பனை பண்ணிப் பார்க்கமுடியாத ஒரு நிலை தோன்றியுள்ள இக்காலத்தில் அவற்றின் பெறுமதியைத் தெளிவாக உள்வாங்கி அவற்றை வாழ்வின் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்தும் ஒரு உலகை உருவாக்கும் சவால் உண்மையிலேயே தற்கால சமூகத்தின் மிகப்பெரிய சவாலாகும்.

முழு வேதாகமத்தையும் ஒரு கையடக்கத் தொலைபேசியில் உள்ளடக்க முடியும், எம் அன்றாட செபங்களைச் செபிக்க அவற்றைப் பயன்படுத்த முடியும், கல்வி, பொது அறிவு, உலக நடப்புப் போன்ற விடயங்களை இவற்றினூடாக அறிந்துகொள்ள முடியும், ஆங்கிலம் உட்பட எல்லா மொழிகளையும் இவற்றைப் பயன்படுத்திக் கற்கமுடியும் போன்ற விடயங்கள் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் பலருக்கு இன்னும் தெரியாமலிருப்பதும், இவைபற்றித் தெரிந்த பலரும் இவற்றைப் பயன்படுத்திப் பலனடையாமல் இருப்பதும் கவலைக்துரிய விடயமாகும்.

கடந்த காலத் தவறுகளால் தொழில்நுட்பத்தின் பிரமாண்டமான வளர்ச்சிக்கு நாம் ஏற்படுத்திய களங்கத்தைக் களைந்து இறைவன் எமக்குத் தருகின்ற இக்கொடைகளைத் தகுந்த முறையில் பயன்படுத்தி, எம் எதிர்காலச் சமுதாயம் சரியான பாதையில் செல்ல வழிசமைத்துக் கொடுக்கவேண்டிய ஒரு மாபெரும் பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் உரிய பெரும் பொறுப்பாகும்.

இதே வேளையில், யாருடைய அறிவுறுத்தல்களையும் வழிநடத்தல்களையும் பொருட்படுத்தாமல், தான் தோன்றித்தனமாக, தன்னடக்கமில்லாத வாழ்வு வாழ்ந்துகொண்டு, தமது வாழ்வின் இலட்சியங்களைத் தொலைத்துக் கொண்டிருக்கின்ற இன்றைய இளம் சமூகத்தினரின் மனமாற்ற வாழ்வுக்காகச் செபிக்கவேண்டியதும் எமது பொறுப்புக்களில் ஒன்றாகும்.

அருட்பணி. ப.யோ. ஜெபரட்ணம்

# திருகோணமலை மறைமாவட்ட புதிய ஆயருடனான நேர்காணல்

**நேர்கண்டவர் : அருட்பணி. B.ரொபின்சன் போல்**

**நீங்கள் ஒரு மறைமாவட்டத்தின் ஆயராய் வருவீர்கள் என எதிர்பார்த்ததுண்டா?**

ஆம்

இயல்பாகவே யாருக்கும் வரக்கூடிய நிலை இது. அதுவும் எமது மறைமாவட்டத்திலிருந்து ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட முன்மொழியப்பட்ட சிலருள் எனது பெயரும் இருந்தது. எனவே எனக்கு சந்தர்ப்பம் இருக்கலாம் எனும் எதிர்ப்பார்ப்பு இயல்பானதே. ஆனாலும் "ஒருவர் ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட்டால்தான் இறைபணியாற்றலாம்" என்றில்லை. இது எனது உறுதியான கருத்து. எனவே எந்நிலையிலும் எனது இறைபணி தொடர்ந்திருக்கும்.

**மிகவும் வெளிப்படையாகவே பதிலளித்தீர்கள் – நன்றி**

**நமது மறைமாவட்டம் பலசமய, பலஇன மக்களை உள்ளடக்கியதாயுள்ளது. இவ்வாறான சூழலில் தங்களின் அணுகுமுறை எவ்வாறாக அமையும் என அறிய விரும்புகிறோம்?**

பல் சமய, பல் இன மக்களிடையே எம் பணி தொடரவேண்டும். இதற்காக அமையக்கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் நாம் பயன்படுத்த வேண்டும். அதேபோல மாணவர்களின் கல்வியை உயர்த்துவதன் மூலமும், திருச்சபையின் சமூகப் பணிகளை விஸ்தரிப்பதன் மூலமும் இனங்களுக்கிடையே வளர்ச்சியையும் ஒற்றுமையையும் உருவாக்கலாம் என நம்புகின்றேன்.

**திருகோணமலை மறைமாவட்டத்தில் மண்ணின் மைந்தனாய் முதல் ஆயனாய் இறைவனால் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். இதில் நீங்கள் விரும்பும் எதிர்பார்ப்புக்கள், மாற்றங்கள் எவை?**

ஆயர் பணி என்பது பெருமைக்குரிய ஒரு விடயமல்ல. திருகோணமலை மறைமாவட்டம் மேலும் வளர வேண்டும். முதலில் ஆன்மீகத்தில் நாம் வளர வேண்டும். ஆன்மீகத்தில் எமக்கிருக்கும் வளர்ச்சி சமூகத்தில் பாரிய மாற்றத்தை உருவாக்கும். இதற்குக் குருக்கள் துறவறத்தவர் பொதுநிலையினர் அனைவரும் அனைத்து நிலைகளிலும் புரிந்துணர்வோடு செயற்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

**குருக்கள், அருட்சகோதர சகோதரிகளிடமிருந்து நீங்கள் (பணிகளில்) எதிர்பார்ப்பது என்ன?**



ஒரு கருத்தை அல்லது திட்டத்தை முன்வைக்கும்போது முரணான கருத்துக்கள் வரத்தான் செய்யும். ஆனால் முரண்பாடுகளையும் தனிப்பட்ட கருத்துக்களையும் கடந்து மறைமாவட்டம், எமது மக்களின் வளர்ச்சி போன்றவற்றை முதன்மையாகக் கொண்டு தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

**எமது மறைமாவட்டத்திற்காக உங்களின் இலக்கும், நோக்கமும் யாது எனக் கூறமுடியுமா?**

Vision: "எல்லோருக்கும் எல்லாமானேன்." இதுவே எனது விருதுவாக்கு

Mission: கத்தோலிக்க விசுவாசிகளின் ஆன்மீக வளர்ச்சியில் அர்ப்பணிக்கும் அதேவேளை அந்த நிலையையும் கடந்து சாதி, மத வித்தியாசம் பாராது அமைதியும் நிறைவும் கொண்ட சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.

**புதிய திருத்தந்தையின் கருத்துக்களில் திருச்சபை மக்களோடு மக்களாய் மாறவேண்டும். நீங்கள் எவ்வாறு இக்கருத்தை செயற்படுத்த எண்ணியுள்ளீர்கள்?**

முதலாவது எமது மக்களை நாம் அறிந்திருக்க வேண்டும். ஆயன் தன் மந்தையை அறிவது அவசியம். இவ்வாறு நாம் பணிசெய்ய எமக்குத் தரப்பட்டுள்ள மக்களை அறிந்து அவர்களது தேவைகளைக் கருத்திற்கொண்டு எம்மை அர்ப்பணித்தால் மக்களை வாழ்வில் உயர்த்தலாம்.

**நமது மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்காகப் புதிய திட்டங்கள் எதையாவது எண்ணியுள்ளீர்களா?**

வரவிருக்கும் காலங்களில் குருக்களோடும், துறவறத்தவர், பொதுநிலையினரோடும் கலந்தாலோசித்து ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்துச் செயற்பட எண்ணியுள்ளேன். மறைமாவட்டத்திற்கென என்னிடம் பல திட்டங்கள் இருந்தாலும் அது எனது திட்டமாகச் செயல்படுத்த விரும்பவில்லை. இது எமது திட்டமாக குருக்கள், துறவறத்தவர் பொதுநிலையினரிடமிருந்து வரும்போது அது பயனுள்ளதாக அமையும் என்பது எனது நம்பிக்கை. இதனால் எந்தத்திட்டங்களையும் தற்போது அறிவிக்க விரும்பவில்லை.

**குருத்துவப் பணியை நீங்கள் தெரிந்து கொண்டீர்களா அல்லது யாராவது உந்துதலாக இருந்தார்களா?**

குருத்துவத்தை நானே தெரிந்து கொண்டேன். எனது விருப்பத்தையும் முடிவையும் இலகுவாக்க என் பெற்றோர், குடும்பத்தவர், உறவினர்களின் நம்பிக்கை வாழ்வும், வழிகாட்டலும், உற்சாகமும் உதவியது.



**குருத்துவப் பணி என்பது பல சவால்களைக் கடந்த பணியாகும். உங்கள் பணிவாழ்வில் நீங்கள் கண்ட சவால்களும் அதனை எவ்வாறு வெற்றி கண்டீர்கள் என்பதையும் எங்களோடு பகிர்ந்து கொள்ள முடியுமா?**

1990ல் அக்கரைப்பற்றுப் பங்கில் பணியாற்றியபோது பாரிய சவால் காத்திருந்தது. நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலை காரணமாக எம்மையும் ஆபத்துக்களிலிருந்து காத்து மக்களையும் காப்பாற்ற வேண்டிய நிலை. ஆண்டவரின் ஆசீரில் துணிந்து செயல்பட்டேன். இக் காலத்தில்தான் அருட்தந்தை Herbert, SJ.அருட்தந்தை செல்வராஜா ஆகியோர் கொல்லப்பட்டார்கள். இந்தப் பயங்கரமான காலத்திலும் பணியைவிட்டு எனது பாதுகாப்பைத் தேடி நான் செல்லவில்லை. சில மாதங்கள் பங்குப் பணிமனையில் தங்காமல் வீடுகளில் தங்கியிருந்து மக்களுக்காகப் பணிசெய்தேன். இதை என்னால் மறக்க முடியாது.

**மறைக்கல்விப் பணி பற்றி உங்கள் கருத்து எத்தகையது? அதுமென்மேலும் சிறந்து வளர உங்கள் ஆலோசனைகளை எங்களுக்குத் தர முடியுமா?**

மறைக்கல்விப் பணி ஒரு மறைமாவட்டத்தின் மிகவும் முக்கியமான பணி. அது இறைவாக்குப்பணி. இறைவார்த்தையை ஒவ்வொரு தரப்பினரையும் கவரக்கூடிய வகையில் கொடுப்பது அனைவருடைய கடமை. பங்கில் ஒவ்வொரு குருவும் முதன்மை மறையாசிரியர். இப்பணியைச் செய்ய எமக்குத் தேவையான கட்டட வசதி உண்டு. அனுபவம் பெற்ற பணியாளர்கள் உள்ளனர். அர்ப்பணம் நிறைந்த மறையாசிரியர்கள் உள்ளனர். இந்த வளங்களை நாம் முறையாகப் பயன்படுத்தினால் இறைவாக்குப் பணியில் நிறைய சாதிக்கலாம்.

**உங்கள் பணிவாழ்வின் Role Model லாக இருந்தவர்கள் யாராவது உண்டா?**

1. எனது பெற்றோர் : இவர்களது விசுவாச வாழ்வு, கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டித்துத் திருத்துதல், சோர்ந்திடும் நேரத்தில் பலமாக இருந்து வழிநடத்தும் பண்பு என்பன எனக்கு உதவியாக இருந்தது.

2. எனது சிறியதாய் அருட்சகோதரி மாறி கொன்ஸ்டன்ஸ் : எனது

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பண ஆண்டு

## துறவற அர்ப்பணத்தின் நித்திய வாக்குத்தத்தம்



திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் வேணிகலாமேரி திரவியநாதன், நிஷாந்தி வேதநாயகம், டிலிசியா புலேந்திரராஜா, மேரி தனுஜா வேனிஸ்மெரின் ஆகியோர் கடந்த 04.07.2015 சனிக்கிழமை அன்று யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியின் பொழுது சபையின் மாகாணத்தலைவி அருட்சகோதரி கிறிஸ்ரா முன்னிலையில் தம்மை முற்றிலுமாக இறைபணிக்கு அர்ப்பணித்து நித்திய வாக்குறுதியை அளித்தார்கள். இந்நிகழ்வு யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் இடம்பெற்றது. இவர்களின் பணியால் திருச்சபை நிறைவான பலனைப் பெற இறையாசீர் வேண்டி வாழ்த்துகிறோம்.

## திருகோணமலை மறை மாவட்டத்தின் ஆறாவது ஆயராகவும் முதல் மண்ணின் மைந்தராகவும்

# கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

திருகோணமலை மறை மாவட்டத்தின் புதிய ஆயராகத் திருகோணமலை மறை மாவட்ட மண்ணின் மைந்தரான மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் பிரான்சிஸ் பாப்பரசரால் 03 யூன் 2015 இல் அறிவிக்கப்பட்டார். இவருக்கான ஆயர்ப் பட்டமளிப்பு விழா 25 யூலை 2015 இல் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எல்லோருக்கும் எல்லாமாகிட என்ற விருதுவாக்குடன் ஆயராகத் திருநிலைப் படுத்தப்படும் மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அடிகளாருக்கு வாழ்த்துக் களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு திருகோணமலை மறை மாவட்டத்தைச் சிறந்த விதமாக நிர்வகிக்க இறையாசீர் நிறைவாகக் கிடைக்க தமிழ் மறை மாவட் டங்கள் பெயரால் வாழ்த்துவோம்.

யாழ்ப்பாணம் - திருகோணமலை - மன்னார் - மட்டக்களப்பு என்ற நான்கு தமிழ் மறை மாவட்டங்கள் உள்ளடங்கலாக இலங்கையில் இன்று 12 மறை மாவட் டங்கள் உள்ளன.

17 பெப்ரவரி 1845 இல் அப்போஸ்தலிக்க ஸ்தானிகாரியப் பிரிவாக யாழ்ப்பாணம் உருவாக்கப்பட்டது. 01 செப்ரெம்பர் 1896 இல் மறைமாவட்டமாகத் தரமுயர்த்தப் பட்டது.

யாழ் மறைமாவட்டம் தமிழ் மறைமாவட்டங்கள் அனைத்திற்கும் தாய் மறை மாவட்டமாகத் திகழ்ந்து பல புதிய மறை மாவட்டங்களைப் பெற்றெடுத்துள்ளது.

திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்டம் 25 ஆவணி 1893 ஆம் ஆண்டிலும் - அனுராதபுர ஸ்தானிகாரிய பிரிவு 19 டிசெம்பர் 1975 ஆம் ஆண்டிலும் (19 மார்ச் 1982 இல் அனுராதபுரம் மறைமாவட்டம் ஆகியது) - மன்னார் மறைமாவட்டம் 24 ஜனவரி 1981 ஆம் ஆண்டிலும் யாழ்ப்பாண மறை மாவட்டத்தில் இருந்து பிரிக்கப் பட்டன.




தன்னிடமிருந்து புதிய தமிழ் மறை மாவட்டங்கள் பிரிந்து செல்கின்ற போது அம் மறை மாவட்டங்களுக்குத் தேவையான ஆயர்களையும் யாழ் மறைமாவட் டமே வழங்கி வந்துள்ளது.

இந்த வகையில் திருகோணமலை மட் டக்களப்பு மறைமாவட்டம் - மன்னார் மறைமாவட்டம் பின்னர் திருகோணமலை மறைமாவட்டம் ஆகிய மறைமாவட்டங்களுக்கான யாழ் மறைமாவட்டத்தைச் சார்ந்த ஆயர்களையும் பின்னர் மண்ணின் மைந்தர்களாக ஆங்காங்கு ஆயர்கள் நியமிக்கப்பட்டமையையும் நோக்குவோம்.

திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் துணை ஆயராக 09 பெப்ரவரி 1967 முதல் 18 டிசம்பர் 1972 வரை மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை பணியாற்றியுள்ளார். 21 நவம்பர் 1968 இல் யாழ் மறை மாவட்டத் துணை ஆயராக நியமனம் பெற்ற மேதகு எல்.ஆர்.அன்ரனி ஆண்டகை 15 பெப்ரவரி 1974 முதல் 17 மார்ச் 1983 வரை திருகோணமலை மட் டக்களப்பு மறை மாவட்ட ஆயராகப் பணியாற்றியுள்ளார். 07 மே 1983 முதல் 03 யூலை 2012 வரை மேதகு கிங்சிலி சுவாம் பிள்ளை ஆண்டகை ஆயராகப் பணியாற்றியுள்ளார்.

திருகோணமலை மறைமாவட்டம் 25 ஆவணி 1893 இல் யாழ் மறை மாவட்டத்தில் இருந்து பிரித்து உருவாக்கப்பட்டது. 23 ஒக் டோபர் 1967 இல் இது திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் ஆயராக மேதகு எல்.ஆர்.அன்ரனி ஆண்டகையைத் (1974 - 1983) தொடர்ந்து மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை (1983 - 2012) ஆயராகப் பணியாற்றினார்.

03 யூலை 2012 இல் திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இருந்து மட்டக்களப்பு புதிய மறை மாவட்டமாக உருவாக்கப்பட்டது. மட்டக்களப்பு புதிய மறைமாவட்டமாக உருவாக்கப்பட்ட போது மட்டக்களப்பு மண்ணின் மைந்தரான மேதகு யோசவ் பொன்னையா ஆண்டகை ஆயராக நியமிக்கப்பட்டார்.

திருகோணமலை மறை மாவட்டத்தின் ஆயராக மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை நியமிக்கப்பட்டார். மேதகு கிங் சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை புதிய ஆயரின் நியமனத்துடன் 03 யூன் 2015 தனது பணியில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

24 ஜனவரி 1981 இல் யாழ் மறை மாவட்டத்தில் இருந்து மன்னார் மறைமாவட்டம் பிரிக்கப்பட்ட போதும் யாழ் மறை மாவட் டத்தைச் சேர்ந்த மேதகு தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை மன்னார் மறை மாவட் டத்தின் முதல் ஆயராக நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்தும் யாழ் மறை மாவட் டத்தைச் சேர்ந்த மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை நியமிக்கப்பட்டார். தற்போது மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை தனது 75 ஆவது வயதை நிறைவு செய்தும் சுகவீனமுற்றும் இருக்கின்ற நிலையில் புதிய ஆயர் ஒருவருக்கான தேவை உருவாகியுள்ளது. மன்னார் மறை மாவட்டமும் தற்போது தன் மண்ணின் மைந்தர் ஒருவரையே ஆயராக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதே.

தற்போது திருகோணமலை மறை மாவட்டத்திற்கு முதல் தடவையாக மண்ணின் மைந்தரான மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மெல்லிய நெடிய உருவம் - நிமிர்ந்த நடை - அழகிய வதனம் - இனிமையான புன்சிரிப்பு - அமைதியான பேச்சு - அன்பான அணுகுமுறை - கனிவான உரையாடல் - நேர்த்தியான வழிநடத்தல் என்பன ஒருங்கே அமையப்பெற்ற அமைதியின் உருவமாய் மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் காட்சிதருகிறார்.

25 டிசம்பர் 1960 ஆம் ஆண்டு புனித மரியாள் பேராலய திருகோணமலைப் பங்கில் பிறந்த மேதகு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் புனித மரியாள் பாடசாலை திருகோணமலை - புனித மரியாள் பாடசாலை புத்தளம் - புனித சூசையப்பர் கல்லூரி திருகோணமலை ஆகிய இடங்களில் கல்விகற்றார்.

திருகோணமலை புனித சூசையப்பர் சிறிய குருமடத்தில் (1975-1978) சிறிய குருமட கல்வியையும் பயிற்சியையும் பெற்ற இவர் மெய்யியல் கல்வியை கண்டி தேசிய குருமடத்திலும் (1978-1981) - இறையியல் கல்வியை கண்டி தேசிய குருமடத்திலும்



(1982-1983) பின்னர் திருச்சி இந்தியா தூய பவுல் குருமடத்திலும் (1983-1986) பெற்றார்.

திருத்தொண்டர் பட்டத்தை 1985 ஆம் ஆண்டு பெற்ற இவர் 21 மே 1986 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவரின் பணித்தளங்களாக உதவிப் பங்குத்தந்தை தூய மரியாள் இணைப் பேராலயம் மட்டக்களப்பு (ஆனி 1986 - ஆவணி 1988) - பங்குத்தந்தை இருதயபுரம் மட்டக் களப்பு (ஆவணி 1988 - தை 1989) - பங்குத் தந்தை அக்கரைப்பற்று (தை 1989 - ஆனி 1993) - இயக்குனர் மறைமாவட்ட விவிலிய திருவழிபாட்டு மறைக்கல்விப் பணி மட்டக் களப்பு (ஆனி 1993 - ஆடி 1999) - பங்குத் தந்தை ஆயித்தியமலை மட்டக்களப்பு (புரட் டாதி 1995 - ஆடி 1999) - உயர் கல்வி இத் தாலி உரோமை (புரட்டாதி 1999 - ஆடி 2001) - விரிவுரையாளர் தேசிய குருமடம் கண்டி (வைகாசி 2001 - ஆடி 2011) - ஆயரின் பிரதிநிதி திருகோணமலை மறைமா வட்டம் (வைகாசி 2011 - இன்றுவரை) - மறைமாவட்ட நிதிப் பொறுப்பாளர் (ஆடி 2012 - இன்றுவரை) என அமைந்திருக் கின்றன.

பி.பி.எச் - பி.ரி.எச் என்ற உரோமைப் பட் டங்களையும் - ஒழுக்கவியலில் எஸ்.ரி.எல் பட்டத்தையும் உரோமையில் பெற்றுள்ள இவர் பல வெளியீடுகளையும் செய்துள்ளார்.

தாகம் - என்கின்ற நாளாந்த கிறிஸ்தவ சிந்தனைகள் அடங்கிய காலாண்டு நூலின்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# வில்லன்களாகும் தந்தையர்கள்

திருமதி. பி. எம். ஜே. அன்ரனி. ஓய்வுநிலை அதிபர்



கண்மூடித்தனமான செயல்களால் நாசமான வீடுகளில் அதுவுமொன்று. தன் இரத்தத்தையெல்லாம் வியர்வையாக்கியும் முடியாது பெரும் கடன் சுமையுடன் அதைக் கட்டி முடித்தவன் ஒரு நொடியில் அது அழிந்ததைக் கண்டு துயரம் தாழாது தாய்நாட்டை விட்டே ஓடி விட்டான். அதில் ஒரு அறைமட்டும் பெருமூச்சு விட்டபடி நிற்க. உள்நாட்டு யுத்தத்தால் கணவனையும் வீட்டையும் இழந்துவிட்ட கமலம் மகன் தேவாவுடன் அதில் குடியேறினாள். வேதாசலம் கல்லூரி விடுதியிலிருந்தபடி 11ம் ஆண்டில் பிரகாசித்துக் கொண்டிருந்த தேவாவிற்கு தொடர்ந்து பணம்கட்ட முடியாது போனதால் அவன் உறைவிடம் மாறியது. வாழ்வாதாரத்திற்காகக் கல்லடிக்கும் தொழிலை மேற்கொண்டாள் கமலம்.

குடியேறிய வளவு மிக விசாலமானதாகையால் லொறியில் கல்லிறக்கி கொங்கிறீற்றுக்கான கல்லை சுத்தியலால் அடித்துக் குவித்து விற்றாள். தேவாவும் அடிப்பான். அத்துடன் அவ்வளவிலே சிறு காய்கறித் தோட்டமும் செய்தான். உணவுக்குத் திண்டாடிய தாய்க்கு நல்ல காய்கறி கொடுத்து மகிழ்ந்தான்.

அடுத்த வீட்டில இராக்காவலாளியாக ஓர் ஸ்தாபனமொன்றில் வேலைபார்க்கும் சாமி பகல் முழுவதும் குடித்துவிட்டு மனைவி மாங்களத்தை வறுத்து எடுப்பான். எடுக்கும் சம்பளத்தில் பத்தாயிரத்தையும் குடிகடன் கட்டிவிட்டு நாலாயிரம் மட்டும் மனைவியிடம் கொடுப்பான். அதில்கூட ஒரு பகுதியைத் திரும்பி வாங்கிவிடுவான். கொடுக்காவிடில் அடி உதை! பிள்ளைகட்கு ஒரு நேரச் சாப்பாட்டைக்கூடக் கொடுக்க முடியாது வேதனைப் படும் தாயைப் பார்த்த விவேக், கரன், கண்மணி ஆகிய மூவரும் நாலாம் வகுப்புடன் படிப்பையே கைவிட்டனர். விவேக்குக்கு பதினாறு வயதானதும் ஒரு கடையில் எடுபிடி வேலை செய்யச் சென்றான். அவன் உழைப்பைக்கூடப் பறித்துக் குடிப்பான் சாமி. மஞ்சட் காமாளையால் கண்மணி இறக்கவே தாய் மங்களம் வேதனை தாங்காது தற்கொலை செய்து கொண்டாள். சாமிக்கு 50 வயதுடன் காவலாளி வேலையும் பறிபோகவே உணவுக்கு வழியில்லாது கலங்கினான். பட்ட காலிலே படும் என்பதுபோல் மதுபோதையில் தடுக்கி விழுந்து வலது காலை முறித்துக் கொண்டு படுக்கையில் வீழ்ந்தான். விவேக், கரன் இருவரும் சீமெந்துக் கலவை போடும் தொழிலில் ஈடுபட்டுழைத்தனர். நாதியற்று படுக்கையில் கிடக்கும் தந்தை என்ற சொல்லுக்கே அருகதையற்ற சாமிக்கு சாப்பாடு போடுவதே கடுப்பாயிருந்தது. அவனிடமிருந்து அவர்கள் கற்றுக் கொண்டது எப்படி ஒரு தந்தை இருக்கப் படாது என்பதே. தமது தாயை அடிமையாக அவன் சித்திரவதை செய்ததும், குடியே மனைவியும் மக்களும் என வாழ்ந்து இப்போது ஒரு தேநீருக்கும் வழியற்றுக் கிடப்பதும் அவர்கள் படித்த பாடம்.

சீமெந்துக் கலவை போட்டுழைத்து வாழ்ந்த இருவரும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டனர். கரனின் மனைவி ஓர் ஊமை. விவேக்குக்கு ஒரு மகன்- கரனுக்கு ஒரு மகள். தந்தை நடமாடிய காலத்தில் அனுபவித்த கொடுமைகள் இல்லாது அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்தனர். இக் காலத்திலே தான் பக்கத்து வீட்டில் கமலம் குடியேறினாள். விவேக், கரன் ஆகியோரின் பிள்ளைகள் வகுப்பில் மிகக் கெட்டிக்காரராயிருந்தனர். சாமி தன் ஆட்டத்தை இழந்து பலனை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

அந்த நாள்! அவர்களைப் பாழாக்க பசாசாக வந்த துரோகி வங்கனைச் சந்தித்த நாள் விடிந்தது. சமுதாயத் துரோகி வங்கன் அவர்களை வழிமறித்துப் பேசினான். "இந்தா பார் விவேக் ஏனிப்படி யெல்லாம் கஷ்டப்பட்டு உழைக்கிறீர்கள்? நான் சொற்படி நடந்தால் சுலபமாய் பணக்காரனாகி விடலாம். என்ன சொல்கிறாய்?" என்றான்.

"சுலபமாய் பணமா? எப்படி சேர் சொல்லுங்க கேட்கிறோம்" என்கிறான் கரன். "இந்தா பாருங்க அந்த வேதாசலம் கல்லூரிக்கு அருகாமையில் என்னோட ரீ கடை ஒன்றிருக்கு. அதை நடத்துங்க - நல்ல வருமானம் - குறைஞ்சது மாதம் 50 ஆயிரம் வரும்".

"50 ஆயிரமா? சேர் நாங்க ரெடி. காட்டுங்க கடைய" எனக்கூறி ஆவலுடன் சென்றனர். அங்கு பாலு என்பவன் ரீ தயாரித்துக் கொடுத்தபடி இருந்தான். படிப்படியாக வங்கன் மூவருக்கும் தொழில் பயிற்சி அளித்தான். பெயர் ரீகடை - நடப்பதோ போதை வஸ்து வியாபாரம்! படித்து நாட்டைக் காக்க வேண்டிய பையன்களெல்லாம் அழிந்து கொண்டிருந்தனர். மாணவர் படிப்பு அழிந்தது - ஒழுக்கம் கெட்டது - பாலியல் துர்நடத்தைகள் தோன்றின. வகுப்பில் ஒரே சண்டை அடிபிடி. விசாரித்த ஆசிரியர்க்கும் அடி! இனி எங்கே கல்வி? சகல பாடசாலைகளிலும் இதுதானே நடக்கும்? இனி எப்படி நல்லாசிரியர்களும் திறன்மிகு டாக்டர்களும் எஞ்சினியர்களும் தோன்றப் போகின்றார்கள்? சமுதாயமே அழிந்து சின்னாபின்னமாகப் போகிறதே!

அன்று சனிக்கிழமை! கமலமும் தேவாவும் கல்லுடைத்துக் கொண்டிருந்தனர். தேவா கேட்டான் - "ஏனம்மா அரேபியாவிலிருக்கும் மாமா எங்களுக்கு உதவுவதில்லை?" என்று. அதற்கவள் "ஏன் ராசா அவனுக்கென்ன விசித்திரமாயா கடவுள் அங்கவயங்களைப் படைத்திருக்கிறார்? எம்மைப் போலதானே அவனும். பாவம் அங்கு எம்மைவிடக் கஷ்டப்பட்டுழைத்து மனைவிக்கும் மூன்று பிள்ளைகட்கும் அவன் அனுப்புவது மாதம் பத்து ஆயிரம் தான். அதைவிட பிறர் உழைப்பில் நாம் வாழ நினைப்பது தவறு. கூன், குருடு, சொத்தி, முடம், பைத்தியம் என்று பிறந்திருந்தால் நாம் உதவி கேட்கலாம். அப்படி இல்லாத பட்சத்தில் ஊனமுற்றோருக்கு உதவக் கடமைப்பட்டிருக்கிறோமேயல்லாது உருவி எடுக்கவல்ல. உன் அப்பாவுக்கு இந்த சுரண்டி வாழும் புத்தி அதிகமாகவே இருந்ததால்தான் நாம் இப்படியானோம். நான் எவ்வளவோ போராடியும் அவரைத் திருத்தவே முடியவில்லை. கடவுள் எமக்கு நல்ல உடல் உயிர் புத்தி ஆகிய தாலந்துகளைத் தந்தது, அனைத்தையும் உதாசீனப்படுத்தி விட்டு சோம்பேறியாக மற்றவரைச் சுரண்டி வாழ்வதற்கல்ல. இப்போது நாம் உழைத்து வாழ்கிறோம். நிச்சயம் இவ்வுலகிலும் சரி மறு உலகிலும் சரி ஆசீர்களை அடைவோம். கூழானாலும் குளித்துக் குடி என்பதை மாற்றி கூழானாலும் உழைத்துக் குடிக்கணும் ராசா".

"ஆமம்மா இந்த அடுத்த வீட்டுக்காரங்க கெட்டவங்க. கஞ்சா விக்கிறவங்க. என்னையும் விழுத்தப் பார்ப்பாங்க. நான் சாட்டுக்கூறி நழுவி விடுவேன். கதைப்பதே இல்லை".

"அதுதான் சரி. துஷ்டரைக் கண்டால் தூர விலகிடணுமய்யா".

"டே கரன் எட்டிப்பாரடா. எப்படித்தாயும் மகனும் கல்லடிக்கிறாங்க எண்டு. கல்லடிச்சுப் பிழைச்சாலும் திமிர்! ஏதோ பெரிய தொழிலதிபர்கள் மாதிரி நினைப்பு. ஸ்கூல் கிறிக்கெற் ரீமுக்கும் இவன்தானே கப்டன். ஏ.எல் றிசல்ட்டும் வரப் போகுது. நிச்சயம் இவன்தான். முதல் ஆளாகத் தேறுவானாம். பின் கையில பிடிக்க முடியுமா? எப்படியெல்லாம் விழுத்தப் பார்த்தோம், முடிஞ்சுதா? உடனடியா இவனுக்கு ஏதாவது செய்யணும் என்னடா செய்யலாம்?"

"டே விவேக் கஞ்சா பக்கற்றை நான் அவன் ஸ்கூல் பாக்கில போட்டுடறேன். நீ நம்ம எடுபிடி பொலீஸ் யாவீர அவன் கை வரிசையைக் காட்டி தேவாவை உள்ள போடச் செய். யாவீருக்கு ஒரு 5000 குடு. போதும் நாளையே நடக்கோணும்".

யாவீர் பணத்தை வாங்கிக் கொண்டான். தான் இதுவரை செய்த பாவங்கள் போதும் என நினைத்து. வீதியில் தேவாவை மறித்து அவன் பையை சோதித்து கஞ்சாப் பக்கற்றை எடுத்து முறைத்தான். "சேர் எனக்கெதுவுமே தெரியாது. யாரோ போட்டிருக்காங்க சேர்" என அழுதான். "டே அழாதே. உன்ன மன்னிச்சுவிடறேன். ஆனா யாரிடமும் விட்டது பற்றி மூச்சும் விடாம ஓடிப்போ" என்று விட்டு, விவேக்கிடம் போய், "டே விவேக் என்ன விளையாடறியா? தேவா பையில் எதுவுமேயில்ல. அவன் கொமிஷனரிடம் போவதாகக் கூறினான். ஏற்கனவே எனக்குக் கெட்ட பெயர்" எனப்பலவாறு பேசிப் பாய்ந்தான். விவேக் வாய் பேசாது மறைந்தான். தேவா காலை கிளம்பும்போது கரன் 100 ரூபாய் கடன் கேட்டு வந்ததும், தான் எடுக்கப்போனபோது கஞ்சா போட்டிருக்கிறான் என்பதும் புரிந்தது. அன்றே ஏ.எல் றிசல்ட் வந்தது. தேவா மெடிக்கல் காலேஜ் போகவேண்டி வந்ததும் இச் சதிகாரரிடமிருந்து தப்புவதற்காக வீட்டை மாற்றிக்கொண்டனர்.

இப்போது 7 வருடங்கள் கழிந்து விட்டன. தேவா பெரிய வைத்திய நிபுணராகத் திகழ்ந்தான். கரனின் அழகிய மகள் பாலியல் கொடுமைக்கு ஆளாகி கொலையுண்டாள். விவேக்கின் மகன் மோகன் மரண தண்டணைக் கைதியாக சிறைவாசம் அனுபவிக்கின்றான். விரைவில் தண்டணை நிறைவேறப்போகிறது. அதைக் கஞ்சா விற்ற பணத்தால் நிறுத்த முடியுமா! கடவுளின் தீர்ப்பைப் பார்த்து பார்த்து அதிர்ந்து போகத்தான் முடியும்! இவர்கள் வாழ்வின் சோகத்திற்கெல்லாம் மூல காரணம் யார்? மரணத்தின் பின் அடையப் போகும் பயங்கரங்கட்கெல்லாம் யார் மூல காரணம்? தந்தைகளாயிருக்கும் வில்லன்களே சிந்தியுங்கள்.

## நவாலியூர் நடுவில்...!!!



கொலை என்று சொல்லக் குலை நடுங்குமம்மா!
குரல் அதுவில்லையெனில் குழியில் மட்டுமா அம்மா!

கொலைகள் புதிதில்லை! கொலைக்களம் அரிதில்லை!
அடைக்கலம் தேடினர்! ஆண்டவன் சந்நிதியில்!

அவரும் ஆனார்! அமரர் எமைப்போலவே!
இதுகூடப் புதிதில்லை! இதுவும் தொடர்ந்த கதையே!

நவாலியூர் நடுவில்! தெரிந்த அமைதி!
நாற்புறமும் உள்ளோர்! கொலை தவிர்க்க நாடும் அடைக்கலம்!

ஓலம் இன்னமும் ஓயாதொலிக்குது!
ஓ என் தேவனே ஓயவேண்டும் எம் அவலம்!

அன்ரோ அருள்வண்ணன்

(நவாலி குண்டுவீச்சில் பலியான ஒரு யுவதியின் சகோதரன்)

## நவாலி
## சென். பீற்றேஸ் ஆலயக் குண்டுவீச்சின் 20ம் ஆண்டு நினைவஞ்சலி




இரக்கம் ஏதுமில்லா அரக்கனின் குண்டுவீச்சில்
இறந்த நம் சோதரரின் இருபதாம் நினைவில் இன்று

சுரக்கும் கண்ணீர் ஆறு சுற்றியே வழிந்து ஓட
மரக்கும் இதயம்கூட நெகிழும் காட்சி அன்று.

அகதியாய் ஓடவைத்து விரட்டியபோது மக்கள்
ஆலயம் வந்து தஞ்சம் கோரியே சூழ்ந்து நிற்க

சடுதியாய் வானில்வந்த இயமனாம் விமானம் ஒன்று
சற்றும் எதிர்பாராமல் சனமெல்லாம் அதிர்ந்து நிற்க
காதுகள் பிளக்கும் வண்ணம் கணத்தினில் குண்டைவீசி
சடலமாய்க் குவித்துவிட்டு ஓடியே போனதம்மா.

ஆலயம் அதிர்ந்து நிற்க உதிரமோ ஆறாய் ஓட
உதவிய கரங்கள் கூட கருகியே மாண்டு போக
ஓ! வென அலறும் சத்தம் உலகையே அதிரவைக்க
சா வென வந்ததம்மா கொடுமையின் சிகரமாக

பிள்ளைக்கு அன்னை இல்லை அன்னைக்குப் பிள்ளை இல்லை
தம்பிக்கு அண்ணா இல்லை தங்கைக்கு அக்கா இல்லை
சிலருக்கோ யாரும் இல்லை குடும்பமே அழிந்ததம்மா
கொடுமையின் உச்சம் இது இனி ஒரு யுத்தம் வேண்டாம்!

நூறுடன் நாற்பத்தேழு உயிர்களைக் காவு கொண்ட
வீறுடன் இயமன் போக அதிர்ச்சியில் உறைந்தோமையா
ஆறுதல் தரவே வாரும்! பீற்றர் போல் புனிதர்களே!
மாண்ட நம் சோதரர்க்கு முத்தியைப் பெற்றுத்தாரும்

- நாவலியூர் நாயகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் மறை சாட்சிகள்: உண்மைகளும் - தாக்கங்களும்

*- சென்ற இதழ் தொடர்ச்சி*

**- அருட்பணி. S.V.B. மங்களராஜா -**

## தேக்க நிலையும் பின்னடைவும்

இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சி செய்த 150 வருட (1658-1796) காலப்பகுதியில் கத்தோலிக்க சமயத்திற்கெதிராகவும் குறிப்பாகக் குருக்களுக்கெதிராகவும் பல்வேறு கடுமையான தடைச்சட்டங்கள் நடமுறையிலிருந்தாலும் கத்தோலிக்க சமயம் வளர்ச்சியடைந்தே வந்துள்ளது. குறிப்பாக புனித யோசப் வாஸ் அடிகள் 1687ல் இலங்கை மண்ணில் காலடியெடுத்து வைத்ததிலிருந்தும், பின் 10 வருடங்களின் பின் மேலும் கூடுதலான ஒரட்டோரியன் சபைக்குருக்கள் வரத்துவங்கியதும் இவ்வளர்ச்சி புதிய உத்வேகம் பெற்றது. 1796ல் இலங்கையாட்சி ஆங்கிலேயர் கைக்கு மாறியபோது கத்தோலிக்கரது எண்ணிக்கை 80,000க்கும் 90,000க்கும் இடையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. உண்மையில் கலாபனைகள், மறைசாட்சியங்கள், துன்புறுத்தல்கள் ஆகியவை கத்தோலிக்க சமயத்தின் வளர்ச்சிக்கும், உறுதிப்பாட்டுக்கும் உதவின என்றுதான் சொல்லவேண்டும். இவ்வித நெருக்குவாரங்கள் இல்லாமல் போகும் போது வளர்ச்சிக்குத் தேவையானதொரு முக்கியமான அம்சம் இல்லாமல் போகிறது என்பதுதான் யதார்த்தம். பூடன்ஸின் கருத்துப்படி கத்தோலிக்கர் தமது விசுவாசத்தை உறுதியுடன் பேணுவதற்குத் துணையாயிருந்ததொரு முக்கிய உந்துசக்தி கலாபனை முடிவுக்கு வந்ததும் இல்லாமல் போனது. முதல் மூன்று நூற்றாண்டுகளில் இடம் பெற்ற கலாபனைகளின்போது இடம்பெற்ற சில முக்கிய நிகழ்வுகள் இதற்கு சான்றாக இருந்ததை அவதானிக்கலாம். உதாரணமாக சக்கரவர்த்தி டேசியஸ் (249-251) ஆண்ட குறுகிய காலத்தில் இடம்பெற்ற மிகக் கொடுமையான கலாபனைக்கு முற்பட்ட சில வருடங்களிலும் பின் சக்கரவர்த்தி வலேரியன் (253-260) ஆண்ட காலத்திற்குப் பின் வந்த ஏறக்குறைய 40 வருடங்களும் திருச்சபைக்கு அமைதியான காலமாக இருந்தது. இந்தக் காலத்தில் திருச்சபை உறுப்பினர்களின் (திருப்பணியாளர் உட்பட) அகவாழ்வில் ஒரு வெதுவெதுப்பான நிலையேற்பட்டது. ஆன்மீகத்தில் இருக்கவேண்டிய அர்ப்பணத்தன்மை குறைவடைந்திருந்தது.

இலங்கையிலும் குறிப்பாக வடபகுதியில் மன்னாரிலும், யாழ்ப்பாணத்திலும் இது போன்ற ஒரு நிலை உருவானது. கலாபனைகளும், நெருக்குவாரங்களும் மிகுந்த ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க திருச்சபை துணிவுடனும் அச்சமின்றியும் தனது உயிர்த்துடிப்பை வெளிப்படுத்தி வந்தது. ஆங்கிலேயர் காலத்தில் குறிப்பாக 1798ல் வந்த பிரித்தானிய ஆளுநர் சேர் பிரட்ரிக் நோர்த் அவர்களும் அவருக்குப் பின் 1806ல் ஆளுநராக வந்த தோமஸ் மெயிற்லண்ட் அவர்கள் காலத்தில் கத்தோலிக்க சமயத்திற்கெதிரான தடைச்சட்டங்கள் நீக்கப்பட்டன. புதிதாகக் கிடைத்த மத சுதந்திரத்தினால் கத்தோலிக்க ஆலயங்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது. குறிப்பாக கணிசமான கத்தோலிக்க மக்கள் தொகையைக் கொண்ட வடக்கில் பல பாரிய விசாலமான ஆலயங்கள் உருவாகின. ஆனால் துரதிஷ்டவசமாக பொதுநிலையினருடையது மட்டுமல்ல திருப்பணியாளர்களதும் ஆன்மீக வாழ்வு ஒரு தேக்க நிலையிலேயே இருந்ததெனலாம். இந்நிலை ஒரு சில தசாப்தங்களுக்கு நீடித்தது. இந்நிலை மீண்டும் சீராக பொறுமையான கடும் உழைப்பு தேவைப்பட்டது. இந்நிலைக்குப் பொது நிலையினர் மீது முழுப்பழியையும் போட முடியாது. திருச்சபையினர் ஆட்சிப்பீடத்திலிருந்த சிலரின் துரதிஷ்டவசமான சில நகர்வுகளும், நாட்டுக்குப் புறம்பே இடம் பெற்ற சில வரலாற்று நிகழ்வுகளும் இதில் முக்கிய பங்குவகித்தது. இதில் துர்ப்பாக்கிய நிலையென்னவெனில் மன்னார் மறைசாட்சிய நிகழ்வினால் மறைப்பணியின் மையமாக விளங்கிய மன்னாரும் ஓரளவுக்கு யாழ்ப்பாணமும் இந்தத் துர்ப்பாக்கிய நிகழ்வினால் ஏற்பட்ட பாதக விளைவுகளின் பெரும் பகுதியை ஏற்க வேண்டியிருந்தது. புதிதாகக் கிடைத்த மதசுதந்திரத்தினால் கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சிக்குப் பல புதிய வாயில்கள் திறக்கப்பட்டன. ஆனால் 100 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் பணிபுரிந்து வந்த கோவாவைச் சேர்ந்த ஒரட்டோரியன் சபையினரால் புதிய திருப்பங்களால் ஏற்பட்ட பலன்களை மக்களுக்கு வழங்க முடியாமல் போனது. சமகாலத்து அறிஞரும், இக்கால திருச்சபை வரலாற்றாசிரியருமான சவிரிமுத்து அடிகள் இதற்குப் பின்வரும் காரணங்களையும் பட்டியலிடுகின்றார்.

1) ஒரட்டோரியன் சபை இலங்கையில் ஆளணிப் பற்றாக்குறையை எதிர்நோக்கியிருந்ததுடன் கத்தோலிக்கருடைய எண்ணிக்கை அதிகரித்தமைக்கீடாகக் குருக்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. சிலபுள்ளிவிபரங்களின்படி 1809ல் 66,830 ஆக இருந்த கத்தோலிக்கரின் எண்ணிக்கை 1827ல் 83,595 ஆக அதிகரித்தது. இவர்களுக்குப் பணிபுரிய 1826ல் 12 குருக்களும் 1832ல் 14 குருக்களும் மட்டுமே இருந்தனர். அதேயாண்டில் இலங்கையில் இருந்த ஒரட்டோரியன்சபைக் குருக்களின் முதல்வர் பிரான்சிஸ் சேவியர் அடிகள் அவசரமாகக் குருக்களை அனுப்பும் படி கேட்டதற்கு இரு குருக்கள் மட்டுமே கோவாவிலிருந்து அனுப்பப்பட்டனர். இந்தக்குருக்களின் பற்றாக்குறை இலங்கை நேரடியாக ரோமாபுரி தலைமைப் பீடத்தின் கீழ் இயங்கும் அப்போஸ்தலிக்க விக்காறியேற்றான 1834 ஆண்டிற்குப் பின்னும் நீடித்தது.

2) அந்நாட்களில் இலங்கையின் மீது ஆன்மீக அதிகாரத்தைக் கொண்டிருந்த கொச்சின் மறைமாவட்ட ஆட்சிப்பீடம் இலங்கை மட்டில் போதியளவு அக்கறை காட்டவில்லை. 1802க்கும் 1834க்கும் இடைப்பட்ட காலத்தில கொச்சின் ஆயர் இலங்கையை தரிசிக்கவேயில்லை. இதனாலும் மற்றும் ஒரு சிறிய குழுவாகவிருந்த குருக்கள் பெரும் எண்ணிக்கையிலான மக்களைப் பராமரிக்க வேண்டியிருந்தமையினாலும் இக்குருக்களின் முன்னர் இருந்த ஆன்ம தாகமும் பணியார்வமும் குறைவடைந்தது. 1830ல் யாழ் மாவட்டத்தில் பணியாற்றிய சல்வடோர் பியடாடே, கொன்ஸ்ரான்சியோ கோமெஸ் எனும் குருக்கள் முறையே 29, 21 ஆலயங்களைப் பராமரிக்க வேண்டியிருந்தது. மன்னார் மாவட்டத்தில் பேட்றோ அலெக்சான்ட்றோ அடிகள் 28 ஆலயங்களைப் பராமரிக்க வேண்டியிருந்தது. குருக்கள் ஒரு ஆலயத்தை வருடத்தில் ஒரு முறை அல்லது மிகவும் அரிதாக இருமுறைதான் தரிசிக்கக் கூடியதாயிருந்தது. இப்படியான அசாதாரண வேலைப்பழு அவர்களது ஆன்மீக வாழ்வையும் பலவீனமடையச் செய்திருக்கலாம். 1816ம் ஆண்டிலும் பின் 1818ம் ஆண்டிலும் கோவாவில் இருந்த ஒரட்டோரியன்சபை முதல்வர் இலங்கைக்குத் தரிசிப்பாளர்களை அனுப்பியிருந்தார். ஒரட்டோரியன்சபைக் குருக்களின் ஆன்மீக வாழ்வு, ஆன்மீகதாகம், விதிமுறைகளுக்குப் பிரமாணிக்கமான வாழ்வு ஆகியவற்றைப் பற்றி அறிக்கை சமர்ப்பிக்க இரண்டு வருட இடைவெளியில் தரிசிப்பாளர்களை அனுப்பியமை நிலைமை அவ்வளவு உகந்ததாக இருக்கவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகின்றது.



3) ஆங்கிலேய ஆட்சியின் கீழ் வரத் துவங்கிய புரட்டஸ்தாந்துசபை மறைப்பணியாளர்கள் மற்றும் பல்வேறு கிறீஸ்தவ சபைகளின் மறைப்பணியாளர்களது பல்வேறு பணிகளுக்கு ஈடுகொடுக்க முடியாது ஒரட்டோரியன் சபையினர் தத்தளித்தனர். வெஸ்லியன் சபையினர், அமெரிக்கன்மிஷன் சபையினர் போன்ற பல சபைகள் வந்து தமது பணிகளை முழு வீச்சுடன் தொடங்கினர். கத்தோலிக்கர் சிலரும் இவர்களின் சபைகளில் இணைந்து கொண்டனர். இவர்கள் ஆங்கிலக் கல்வி வழங்கக்கூடிய பல பாடசாலைகளையும் ஆரம்பித்தனர். இதுவரை ஒல்லாந்தக் கல்வினிஸ சபையின் சவாலை மட்டும் எதிர்கொண்ட கத்தோலிக்க மறைப் பணியாளர் இப்போது பல சபைகளின் வருகையினால் ஏற்பட்ட புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை.

4) மிக முக்கிய தேவையும் பிரச்சினையாகவுமிருந்த ஆங்கிலக்கல்வி வழங்க வேண்டிய தேவையை ஒரட்டோரியன் சபையினரால் நிறைவு செய்ய முடியவில்லை. அரச பதவிகளைப் பெறுவதற்கும் தேசிய நீரோட்டத்தில் இணைவதற்கும் தேவைப்பட்ட ஆங்கிலக்கல்வியைப் பெற முடியாத நிலையிலிருந்ததால் கத்தோலிக்கர் மற்றவர்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது தாம் பின்தங்கியிருந்ததையுணர்ந்தனர். இந்நிலையில் தான் யாழ்ப்பாணம் உட்பட பல முக்கிய நகரங்களில் இருந்த பொறுப்பு வாய்ந்த பொதுநிலைக் கத்தோலிக்கர் சிலர் ஆங்கிலக் கல்வியை வழங்கக்கூடிய ஐரோப்பிய மறைப்பணியாளரை அனுப்பும்படி ரோமாபுரிக்கு மனுவொன்றை அனுப்பினர்.

*- அடுத்த இதழில் தொடரும்*

## அகில இலங்கைதிருவிவிலியப் போட்டி -2015

தேசியமறைக்கல்விநடுநிலையமும் கிறிஸ்தவ அலுவல்கள் திணைக்களமும் இணைந்துபாடசாலைகளுக்கிடையில் நடாத்தியதிருவிவிலியப் போட்டிஎமதுமறைமாவட்டத்தில் வடமாகாணத் கல்வித் திணைக்களத்துடன் இணைந்துபாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்டபோது98 பாடசாலைகள் பங்குபற்றின. நடாத்தப்பட்டபோட்டிகள் ஆவன:வேதாகமஅறிவுப் போட்டி,பேச்சுப்போட்டி,நாடகப்போட்டிஎன்பனவாகும். வெற்றிபெற்றவர்களுக்கும்,பாடசாலைகளுக்கும் எமதுபாராட்டுக்களும்,வாழத்துக்களும்.

**வெற்றிபெற்றோர் விபரம் கீழ்வருமாறு**

**வேதாகமஅறிவுப்போட்டி:**

**கீழ்ப் பிரிவு**

1ம் இடம் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசிய பாடசாலை
2ம் இடம் யாழ். வேம்படிமகளிர் உயர்தரப்பாடசாலை
3ம் இடம் யாழ். சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

**மத்தியபிரிவு**

1ம் இடம் யாழ். கரம்பொன் சிறிய புஷ்பம் மகளிர் ம.வி.
2ம் இடம் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசிய பாடசாலை
3ம் இடம் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி

**மேற் பிரிவு**

1ம் இடம் யாழ். சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை
2ம் இடம் யாழ். கரம்பொன் சிறிய புஷ்பம் மகளிர் ம.வி.
3ம் இடம் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசிய பாடசாலை

**வேதாகமநாடகப் போட்டி**

**கீழ்ப் பிரிவு**

1ம் இடம் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி
2ம் இடம் யாழ். வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி

**மத்தியபிரிவு**

1ம் இடம் யாழ். நாவாந்துறைறோ.க.த.க. பாடசாலை
2ம் இடம் முல். புதுக்குடியிருப்புறோ.க. பாடசாலை
3ம் இடம் யாழ். இளவாலைகன்னியர் மடம் மகாவித்தியாலயம்

**மேற் பிரிவு**

1ம் இடம் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசிய பாடசாலை
2ம் இடம் யாழ். இளவாலைஹென்றிஅரசர் கல்லூரி
3ம் இடம் யாழ். அச்சுவேலிசென். திரேசாள் மகளிர் கல்லூரி

**வேதாகமப் பேச்சுப் போட்டி:**

**கீழ்ப் பிரிவு**

1ம் இடம் செல்வி. சூசைதாசன் தனுசியா
முல். சிலாவத்தைதமிழ் வித்தியாலயம்
2ம் இடம் ரா. ஜீவிதா
யாழ்.திருக்குடும்பக்கன்னியர் மடம் தேசிய பாடசாலை
3ம் இடம் யு. மேரிலக்சிகா
யாழ். இளவாலைகன்னியர் மடம் மகாவித்தியாலயம்

**மத்தியபிரிவு**

1ம் இடம் செல்வன் அகஸ்ரின் டெனிஸ்ரன்
யாழ். மணல்காடுறோ.க.த.க. பாடசாலை
2ம் இடம் செல்விபு. டினுசியா
யாழ். ஆனைக்கோட்டைறோ.க. த.க. பாடசாலை
3ம் இடம் து. சுலஸ்சினியூலியற்
யாழ். நெடுந்தீவுறோ.க. மகளிர் கல்லூரி

**மேற் பிரிவு**

1ம் இடம் செல்வி. யு.யு.ஏ.ஆன் யூடிற்றா
யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசிய பாடசாலை
2ம் இடம்செல்விஅனற் ஜெனா
யாழ். இளவாலைகன்னியர் மடம் மகாவித்தியாலயம்
3ம் இடம் .செல்வி. வேதாஞ்சலி
யாழ். நெடுந்தீவுறோ.க. மகளிர் கல்லூரி

முதலாம் இடத்தைப் பெற்ற போட்டி நிகழ்வுகள் தேசிய மட்டத்தில் புரட்டாதி 05ம் திகதி நடைபெறும் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ். மறைக்கல்வி நடுநிலையம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவாவில் குடிகொண்டிருக்கும் யாழ்ப்பாணப் பட்டணத்துப்

# புதுமை மாதா

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திரு. அன்ரன் சின்னராசா பிலிப், கனடா
(கனடாவில் வெளிவரும் **கனகத்தூதன்** என்னும் கத்தோலிக்கபத்திரிகையின் ஆசிரியர்)



முடக்குவாதத்தால் நடக்க முடியாமல் இருந்த ஒருவர் இம் மரியன்னையின் திரு உருவத்தின் முன்னால் செபித்த பின்னர் முழுமையாகச் சுகம் பெற்று நடந்தார்.

### பவனியின் போது புதுமைகள்

ஓர் ஆலயத்தில் பணியாளராக வேலை பார்த்த ஒருவர், தூய தோமையாரைப்போல் இம் மரியன்னையின் திருவுருவத்தால் நிகழ்ந்து வரும் புதுமைகள் ஒன்றையும் நம்புவதற்கு தயாராகவில்லையென்றும் தனக்கு நல்ல ஆரோக்கியமும் நன்றாக நடப்பதற்கு பலமும் கிடைத்தால் மட்டுமே தான் அதை நம்புவார் என்று கூறிவந்தார்.

அவர் அன்னையைத் தேடி வந்த போது அவர் குணம் பெற்றார், ஆனால் அவர் நம்பிக்கையின்மை காரணமாக அவருடைய சுகம் படிப்படியாகவே நிகழ்ந்தது. இப்பொழுது எல்லோரும் இம் மரியன்னையின் திருவுருவத்தைப்பற்றியும் அதனால் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற அற்புதங்களைப் பற்றியும் பேசுவதே கதையாக இருந்தது. சிற்பி அன்னக்குட்டியோ இடம்பெற்றுக் கொண்டிருக்கும் புதுமைகளைப்பற்றி ஆச்சரியப்பட்டு, மரியன்னையின் திருவுருவத்தைத் தனது வீட்டிலிருந்து எடுத்துச் செல்லுமாறு ஆலய அதிகாரிகளிடம் பணிவாகக் கேட்டார். ஆலய அதிகாரிகளும் அன்னக்குட்டியின் வேண்டுகோளை ஏற்று அதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு அன்னையின் திருவுருவத்தை ஆலயத்துக்குக் கொண்டுவரத் திட்டங்களைத் தீட்டினர்.

1614ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24ஆம் திகதி, சிற்பி அன்னக்குட்டியின் வீட்டிலிருந்து ஆடம்பரமாக மிகவும் சிறப்பான முறையில் வெற்றிமய மாதாவின் ஆலயத்துக்குப் பவனியாகக் கொண்டு செல்லப்பட்டது. பவனியில் மரியன்னையின் திருவுருவம் அலங்கரிக்கப்பட்ட தேரில் வைத்து, வெற்றிமய அன்னையின் பக்தர்களால் சூழப்பட்டு, குருக்களும், துறவியர்களும் மிகச் சிறப்பான திருவுடைகளை அணிந்து இரு வரிசையில் பவனியாகக் கொண்டு செல்லப்பட்டது.

பவனி ஆரம்பமாக இருக்கும் வேளை, சங்கிலி அரசன் தனது படைவீரர்களைப் பவனி செல்லும் பாதையில் நிறுத்தி பவனி செல்லாதவாறு இடையூறு ஏற்படுத்துவதாகச் செய்தி ஒன்று வந்தது. இதைக் கேள்வியுற்ற மக்கள் மிகவும் துக்கமாகவும், சங்கிலி அரசன் மேல் கோபமும் கொண்டனர். ஆனால் துறவிகளும் குருக்களும் பொறுமையைக் கடைப்பிடித்து, இரண்டு போர்த்துக்கேயர்களைத் தங்களின் பிரதிநிதிகளாகச் சங்கிலி அரசனிடம் அனுப்பி, இப்பவனிக்கான முக்கியத்துவத்தையும் காரணத்தையும் தெரிவித்தார்கள்.

பிரதிநிதிகளின் விளக்கத்தை விரிவாகக் கேட்ட சங்கிலி அரசன், தான் எடுத்த முடிவை மாற்றிக்கொண்டு, அப்பவனி சிறப்பாகச் செல்லவும் தனது மாளிகை முன்பாகச் செல்ல வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு தனது பங்களிப்பையும் வழங்க முன்வந்தார். மரியன்னையின் திருவுருவம் அரசனின் மாளிகை முன் சென்ற பொழுது அரசனும் அரசியும் பிள்ளைகளும் தமது முற்றத்தில் நின்று மிகவும் ஆச்சரியமாகவும் ஆர்வமாகவும் இரசித்துக் கொண்டு நின்றனர். மேலும் பல நூற்றுக்கணக்கானகத் தோலிக்கரில்லாத மக்களும் இப் பவனியில் கலந்து கொண்டு சிறப்புறச்செய்தனர்.

இப்பவனி முடிவுறும் வேளை மரியன்னையின் பவனி சிறப்பாகச் சென்றதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் "இந்த போர்த்துக்கீசரைப்பார்த்து ஆச்சரியப்படுகின்றேன். வழமையாக இவர்கள் மிகவும் பலசாலிகளாகவும், புத்திசாலிகளாகவும் இருப்பதாக எண்ணினேன். ஆனால் இப்பொழுது ஒரு மரக்கட்டையைத் தங்களின் தோளின் மேல் வைத்து அன்னக்குட்டியின் வீட்டிலிருந்து ஆலயத்துக்குக் கொண்டு செல்லுகின்றார்களே" என்று ஏளனம் செய்துள்ளார். அவர் இவ் வார்த்தைகளைச் சொல்லி முடியு முன்னரே அவர் முகத்தில் ஒரு கல் வந்து மோதி, உடனே தரையில் விழுத்தப்பட்டு அனைவர் முன்னிலையிலும் மரணமானார்.


### வெற்றிமய மாதா புதுமை மாதா ஆகிறார்

இப்பொழுது இத்திருவுருவம் வழியாகப் பல புதுமைகள் நிகழ்ந்ததால் புதுமை மாதா எனப் பிரபல்யமாக அழைக்கப்பட்டது. வெற்றிமய மாதா ஆலயத்துக்குப் பவனியாகக்கொண்டு வரப்பட்டு சிறப்பான ஒரு மேடையில் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டது. அற்புதங்கள் பல நிகழ்ந்த இத்திருவுவத்தைச் சுற்றி மக்கள் வணங்கி நின்றார்கள். அன்னையின் பாதத்தைக் கொஞ்சி அவவின் ஆசீரையும் ஆதரவையும் பாதுகாப்பையும் வேண்டி நின்றார்கள். முதல் தடவையாக ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்ட புதுமைகள் பல புரிந்து கொண்டிருக்கின்ற அன்னையின் திருவுருவம் வழமையான வழிபாடுகள் செலுத்தப்பட்டு, துறவிகள் ஒரு புதிதாக அமைக்கப்பட்ட ஒரு திருப்பீடத்தில் புதுமை அன்னையை எழுந்தேற்றம் செய்து வழிபடத் தொடங்கினார்கள்.

நாட்கள் செல்லச் செல்ல வெற்றி மய மாதாவின் ஆலயத்தில் வைக்கப்பட்ட புதுமை மாதாவினால் எண்ணற்ற புதுமைகள் நிகழத் தொடங்கி விட்டன. இதனால் அன்னையை வழிபடவும் தங்கள் விண்ணப்பங்களை அன்னையிடம் தெரிவிக்கவும் மக்களின் வருகை அதிகரித்துக் கொண்டு சென்றது. யாழ் குடாநாட்டில் வாழும் அனைவருமே இப் புதுமை அன்னையைத் தமது பாதுகாவலியாக ஏற்றுக் கொண்டு இவவுக்கு ஓர் பாரிய, அழகான ஆலயத்தை எழுப்பத் தீர்மானித்தனர்.

### புதுமை மாதாவிற்கு ஒரு பேராலயம்

புதுமை மாதாவுக்கு ஒரு பேராலயத்தை நிர்மாணிக்கும் பொறுப்பை ஆற்றல் கொண்டவரும், பெரும் செல்வாக்கும், மதிநுட்பமும் படைத்தவருமான அருட் பணி பேற்றோ டி பிற்றான்கோர் எனும் குருவானவரிடம் ஒப்படைக்கப்படவே, அவரும் உடனடியாக ஆலயத்தைக் கட்டும் பணியை ஆரம்பிக்கத் தயாரானார். ஆலயத்துக்கு அத்திவாரத்தைப் போட்டு கட்டிடத்தை ஆரம்பிக்க இருக்கும் வேளை ஓர் ஏமாற்றமான செய்தி கோவாவிலிருக்கும் அவருடைய சபையைச் சார்ந்த திருமடத் தலைவரிடமிருந்து ஓர் முக்கியமான பொறுப்பு வாய்ந்த பணியை மேற் கொள்வதற்காக கோவாவுக்கு உடனடியாக வரும்படி அழைப்பு வந்தது. அருட்பணி பேற்றோ அவர்கள் மிகவும் கவலையடைந்தவராக, கண்களில் கண்ணீர் மல்க புதுமை மாதாவிடம் "ஓ அன்னையே, நான் எவ்வளவு விரும்பினாலும், உமக்கு ஓர் ஆலயம் கட்டுவதற்கு நான் தகுதியற்றவனும், ஓர் பாவியென்றும் அறிவேன். எவ்வளவு சிறிய பணியாக இருப்பினும் அதை நீர் ஏற்றுக்கொள்ளமாட்டீர் என எனக்குத் தெரிந்தாலும், உமக்கு ஒரு மிகச்சிறந்த பணியை ஆற்ற ஆவலாயிருக்கின்றேன் அன்னையே. ஆகவே உமக்குச் சித்தமானால் நான் மீண்டும் திரும்பி வந்து உமக்கு நான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற தயை புரிவீராக. எனது வாழ்வை உமக்குக் காணிக்கையாக்கி, என் வாழ்நாளில் உமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டி சேவை புரிய அருள் தாரும்" என வேண்டினார்.



அடிகளார் கோவாவுக்கு வந்தபோது அவருடைய திருமடத்தலைவர் அவரின் ஆவலைத் தெரிந்து கொண்டு அதன் சிறப்பினையும் புரிந்தவராக பெற்றோ அடிகளாரை யாழ்ப்பாணம் செல்ல அனுமதித்தார். புதுமை மாதாவுக்கு ஓர் ஆலயம் பேற்றோ அடிகளார் யாழ்ப்பாணம் திரும்பி வந்து ஒன்றரை ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது. 1622 ஆம் ஆண்டு செப்ரம்பர் 8ஆம் நாள் ஆலயக் கட்டிடவேலைகள் முழுமை பெற்று, புதுமை மாதாவின் திருவுருவம் புதிய ஆலயத்திற்குக் கொண்டு வருவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன.

போர்த்துக்கீசர்கள் வெற்றிமய மாதாவின் பெருநாளைத் திருத்தூதர்கள் சீமோன், யூதா ததேயு திருவிழாவின் போதே கொண்டாடுவது வழக்கமாகமிருந்தது. ஆகவே அந்த நாளிலே புதுமை மாதாவின் திருவுருவத்தைப் புதிதாகக் கட்டப்பட்ட ஆலயத்துக்கு பவனியாக கொண்டு சென்றார்கள்.

பேற்றோ அடிகள் மேலும் பல ஆண்டுகள் யாழ்ப்பாணத்திருச்சபையில் பணி புரிந்து தனது 70ஆம் வயதில் நிலைவாழ்வு பெற்றார். அவரின் திருவுடல் அவரால் கட்டியெழுப்பப்பட்ட புதுமை மாதா ஆலயத்திலே அடக்கம செய்யப்பட்டது. இதே காலத்தில் வாழ்ந்த ஒரு படைத்தளபதியாக இருந்த பிலிப்பே டி ஒலிவிய்ரா என்பவரும் இவ்வாலயத்தைக் கட்டியெழுப்புவதற்க்குத் துணையாக இருந்தவராவர். இவரும் 1627 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி மரணமடைந்து இதே ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.

பலருக்கு இவ்வாலயம் யாழ்ப்பாணத்தில் எங்கே கட்டப்பட்டது என்ற வினா எழலாம். ஆம் இவ்வாலயம் யாழ்ப்பாண கோட்டையினுள்ளே தான் கட்டப்பட்டது. 1658 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24ஆம் திகதி வரை புதுமை மாதாவிற்கான வழிபாடுகளும் வணக்கங்களும் இடம்பெற்று ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அவர்களின் கொடியேற்றப்பட்தோடு நிறுத்தப்பட்டது. 1661ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 16ஆம் திகதி இப் புதுமை மாதாவின் திருவருவம் கோவாவில் உள்ள தூய பிரான்சிஸ் அசிசியாரின் கன்னியர் மடத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இன்று கோவாவில் தூய பேதுரு ஆலயத்தில் வைத்துப் புதுமை மாதாவைக் கோவா மக்கள் சிறப்பாக வழிபட்டு, ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் வரும் முதல் ஞாயிற்றுக்கிழமையில் புதுமை மாதாவின் பெருவிழாவைக் கொண்டாடி வருகின்றார்கள்.

17ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் உருவான புதுமை மாதா என்றழைக்கப்படும் அற்புத அன்னையின் திருவுருவம் இன்று இந்தியாவின் கோவா மாநிலத்தில் உள்ள பநெலிம் என்ற நகரில் தூய பேதுரு ஆலயத்தில் வைத்து வணங்கப்பட்டு வருகின்றது.

(புதுமைகள் தொடரும்)

## திருகோணமலை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

28 வெளியீடுகள் 2010 - 2011 ஆண்டு காலப்பகுதியில் வெளிவந்துள்ளன.

- தவக்காலத்தில் இவர்களோடு - என்கின்ற தவக்கால சிந்தனை 2008 ஆம் ஆண்டிலும் - ஒப்புரவின் ஊடாக சமாதானம் - என்கின்ற தவக்காலச் சிந்தனை 2009 ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டுள்ளது.

இவற்றைவிட இவரின் வழிகாட்டுதலில் கருத்தரங்குகள் - விரிவுரைகள் என்பனவும் நடைபெற்றுள்ளன. மனசாட்சி - ஒழுக்கவியல் பற்றிய கருத்தரங்கைக் கண்டி தேசிய குருமடத்தில் (2004) நிகழ்த்தினார். கொழும்பு அக்குவினாஸ் கல்லூரி ஒழுக்கவியல் விரிவுரையாளராக (2006 முதல் இன்று வரை) பணியாற்றிவருகிறார். இதே வேளை மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக் கழகத்திலும் பகுதிநேர விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.

திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கௌரவ பொதுச் செயலாளராக சித்திரை 2012 முதல் இன்றுவரையும் பணியாற்றி வருவதோடு திருகோணமலை தமிழர் அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவராக மாசி 2015 முதல் இன்றுவரை பணியாற்றி வருகிறார்.

இவற்றைவிட வருடாந்தத் தியானங்களைத் திருக்குடும்பக் கன்னியர் சபைப் பயிலுனர்கள் - நல்லாயன் சபைக் கன்னியர்கள் ஆகியோருக்கு வழங்கியுள்ளதுடன் மாதாந்தத் தியான உரையினைக் கண்டி தேசிய குருமடத்திற்கும் 2014 இல் வழங்கியுள்ளார்.

கண்டி பதுளை திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்ட மறையாசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் - யாழ் மறைமாவட்டக் குருக்களுக்கான சிறப்புக் கருத்தரங்கு (2014) - திருகோணமலை புனித மரியாள் கல்லூரி மாணவிகளுக்கான கருத்தரங்கு - மட்டக்களப்பில் திருப்பாடல்கள் பற்றிய சிறப்பு வகுப்புகள் (2012) என்பவற்றையும் நிகழ்த்தியுள்ளார்.

திருகோணமலை மறைமாவட்டமானது 2 ஆயிரத்து 727 சதுரக் கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 14 ஆயிரத்தி 795 கத்தோலிக்கர்கள் இங்கு வாழ்கிறார்கள்.

திருகோணமலை மறைமாவட்டத்தின் புதிய ஆயராக திருநிலைப்படுத்தப்பட இருக்கும் மேதகு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் உடல் உள சுகத்துடனும் - ஆன்மீக பலத்துடனும் நீடூழி வாழ்ந்து சிறந்த பணியாற்ற இறையாசி வேண்டுவோம்.

**நன்றி : உதயன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சிறு வயது முதல் என்னில் அக்கறைகொண்டு, குருத்துவ அழைத்தலில் வழிகாட்டியாகவும் பலமாகவும் இருந்து வருபவர்.

3. எனது ஞானத்தந்தை திரு. J.M மாட்டின் : எனது குருத்துவ வாழ்வில் பலமாக இருந்து உற்சாகப்படுத்துபவர். எப்போதும் சிரித்த முகத்துடன் எனது நலனில் அக்கறை காட்டுபவர்.

4. அருட்தந்தை எட்வட் கொஸ்டா, அமதி : இவரைக் கண்டி தேசிய குருமடத்தில் சந்தித்தேன். ஆன்மீக வழிகாட்டியாக இன்றும் பணியாற்றி வருகிறார். பணிவு, கீழ்ப்படிவு, செப வாழ்வு, ஆன்மீகம் என்று பல விடயங்களை அவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

உங்களது பணிவாழ்விலே பாரிய சிலுவை ஒன்றைத் தோள்மேல் சுமத்தியிருக்கிறது திருச்சபை. இச்சிலுவையை எவ்விதம் திருச்சபையின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவீர்கள் என்று அறிந்து கொள்ளலாமா?

இப் பொறுப்பை ஏன் "பாரிய சிலுவை" என்று பார்க்க வேண்டும்? அழைக்கும் இறைவன் வழிகாட்டலையும், தேவையான அருளையும் தருவார் என்று உறுதியாக நம்புகிறேன். எமது மறைமாவட்டம் மேலும் வளரவேண்டுமெனும் எண்ணமும் ஆர்வமும் குருக்கள் துறவறத்தவர், பொதுநிலையினர் மத்தியில் இருக்கிறது. அதற்காகத் தமது பங்களிப்பையும் தரக்காத்திருக்கிறார்கள். இவ்வாறு இறையருளும் உடனுழைப்பாளர்களின் பங்களிப்பும் இருக்கும்போது எனது பணி சிலுவையாகத் தெரியாது.

**உங்களது குருத்துவப் பணிவாழ்வில் நீங்கள் மேற்கொண்ட செயற்பாடுகளில் உங்களுக்கு மனநிறைவைத் தந்த விடயம் எது?**

1. மக்களுக்கான பணி : எனது பங்கு, ஆன்மீகம் என்று மட்டும் இருந்துவிடாமல் தேவையேற்படும்போது உயிரையும் பொருட்படுத்தாது ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு உதவியது மனநிறைவைத் தந்துள்ளது.

2. இல்லத்தரிசிப்புகள் : ஆயித்தியமலைப் பங்கில் பணியாற்றியபோது இதை அதிகம் உணர்ந்தேன். மறைக்கல்விப் பணிகளோடு பங்கையும் பார்க்கும் பணி எனக்குத் தரப்பட்டதால் எனக்குக் கிடைத்த நேரங்களைத் திட்டமிட்டு குடும்ப தரிசிப்புகள் செய்தேன். இதன் மூலமாக மக்களின் கஷ்டங்களை அறிய முடிந்தது. இம்மக்களையும் நம்பிக்கையில் வழிநடத்த முடிந்தது. ஆயித்தியமலையில் பணியைத் தொடங்கிய காலத்தில் ஒரு வயது முதிர்ந்த அம்மா என்னைத் தேடி வந்து ஏன் எங்களுடைய ஊருக்கு வருவதில்லை என்று கேட்டார். அன்று முதல் வாரத்திற்கு ஒரு தடவை அங்கு சென்று அங்கிருந்த ஆறு குடும்பங்களையும் சந்தித்து பணியாற்றியது திருப்தியைத்தந்தது.

3. கல்விப்பணி : 1999-2001 வரையான காலப்பகுதியில் உரோமையில் உயர்கல்வி கற்ற காலத்தில் சிங்கப்பூரைச் சேர்ந்த ஒரு குருவைச் சந்தித்தேன். நாம் இருவரும் ஒரே இல்லத்தில் தங்கி ஒரே கலாசாலைக்கு சென்றுவந்தோம். இக்காலப் பகுதியில் ஏற்பட்ட நட்பு பல நல்ல விடயங்களை சாதிக்கச் செய்தது. உயர்கல்வி முடிந்து அவர் சிங்கப்பூருக்குச் சென்று கத்தோலிக்க நன்கொடையாளர்கள் மூலமாக இலங்கையில் வசதி குறைந்த மாணவர்களுக்குக் கல்விக்கான நிதி உதவிகளைச் செய்தார். 2004ம் ஆண்டு முதல் இப்பணி 7 மாணவர்களுடன் ஆரம்பித்து இன்று பெருமளவிலான மாணவர்கள் பயனடைகின்றார்கள். திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், தேவகிராமம், கண்டி போன்ற பகுதிகளில் வாழும் மாணவர்களும் இப்பணி மூலமாகப் பயனடைகின்றார்கள். இப்பணியும் மனநிறைவைத் தருகின்றது.

**உங்களது குடும்பம், சகோதரர்கள் பற்றிக் கூற முடியுமா?**

எனது தந்தை ஓய்வு பெற்ற நில அளவையாளர். 1993ல் காலமானார். பங்குப் பணிகளில் அதிகம் ஈடுபட்டவர். எனது தாய் பேராலயப் பங்கில் வசிக்கின்றார். நாம் 11 பிள்ளைகள். ஒருவர் சிறுவயதிலேயே இறந்துவிட்டார். எனது கடைசித் தங்கை அப்போஸ்தலிக்க கார்மேல் சபையில் சேர்ந்த அருட்சகோதரியாகத் தற்போது குவெய்த் (Kuwait) நாட்டில் பணியாற்றுகிறார்

நன்றி: திருமலைத்தீபம்

## தரும் விசுவாசப் facebook போதனை

| | |
|---|---|
| ஆசிரியர் | : உன்னால் கடவுளைக் காண முடியுமா? |
| மாணவன் | : முடியாது. |
| ஆசிரியர் | : உன்னால் கடவுளைத் தொட முடியுமா? |
| மாணவன் | : முடியாது. |
| ஆசிரியர் | : ஆகவே, கடவுள் என்று ஒருவர் இல்லை. |
| மாணவன் | : உங்களால் உங்கள் மூளையைக் காணமுடியுமா? |
| ஆசிரியர் | : முடியாது. |
| மாணவன் | : உங்களால் உங்கள் மூளையைத் தொடமுடியுமா? |
| ஆசிரியர் | : முடியாது. |
| மாணவன் | : ஆகவே, உங்களுக்கு மூளை இல்லை என்று சொன்னால் ஏற்றுக்கொள்வீர்களா? |
| ஆசிரியர் | : ??? |


**என்றும் வாழும் இறைவா,**
**எம் பெற்றோர்களுக்கு நித்திய சாந்தி அளித்தருளும்**



அமரர்
**மோசேஸ் மேரிறோசலீன் நல்லம்மா**
மண்ணில்: 26.06.1909
விண்ணில்: 28.07.1965
**50ம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
**சூசை மோசேஸ் செல்லத்துரை**
மண்ணில்: 01.08.1901
விண்ணில்: 12.02.1985
**30ம் ஆண்டு நினைவஞ்சலி**

நெஞ்சம் மறப்பதில்லை உம் நினைவை இழப்பதில்லை
காலங்கள் தோறும் உம் நினைவோடு உங்கட்காய் செபித்திருப்போம்.

உங்கள் நேசம், பாசம் மறவாத
பிள்ளைகளும்,
பிள்ளைகள் குடும்பத்தினரும்.


92, ஹில் வீதி
தெஹிகளை

39, மத்தியூஸ் வீதி,யாழ்ப்பாணம்.

AD 53



**2ம் ஆண்டு நினைவஞ்சலி**



**வைத்தியான்**
**மரியநாயகம்**

பிறப்பு
30.12.1941

இறப்பு
25.07.2013

நன்மையே செய்து நலமுடன் வாழ்ந்தீர்
நானிலத் தோர்கள் நாடியே வந்தார்
குடும்பத்தின் விளக்காய் குவலயம் வாழ்ந்தீர்
குறும் மொழி பேசும் குமரனே என்றும்
கண்ணென நீரும் காத்திட்டீர் எம்மை
காலன்தான் அன்றுயாம் கதறிடப் பிரித்தான்
ஆண்டுகள் இரண்டு ஆகிய போதும்
அண்ணலே உம்மை அவனியில் மறவோம்
விண்ணவர் தேசம் விரைந்திட்டீர் ஐயா
விம்மியே உமக்கு விடியலைத் தேடி
இறைவன் பாதம் இறஞ்சி நிற்கின்றோம்
இன்பமாய் நீரும் இறையடி வாழ்வீர்

AD 51

தகவல்:
மனைவி, மருமக்கள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்



**3ம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு
06
01
1936



இறப்பு
21
07
2012

**சந்தியாகு சூசைப்பிள்ளை**

அன்பையே கொட்டி அவனியில் வளர்த்தீர்
ஆனந்தமாய் அடியவர் வாழ
பொன்மனம் கொண்டோன் என்றுமே உம்மை
பூதலத்தோர்கள் போற்றியே செய்வார்
காரிகைக் கெந்த நல் காதலனாக
காசினி மீதில் களிப்புடன் வாழ்ந்தீர்
காலன் தான் உம்மை கவர்ந்துமே கொன்றான்
கலங்குகிறோம் உமது காவலை இழந்து
வருடங்கள் மூன்று ஆகிய போதும் வருந்துறோம்
என்றும் வேந்தன் உம் நினைவால்
விண்ணவர் தேசம் விருப்புடன் விரைந்தீர்
விண்ணவன் உமக்கு நன்மையே பொழிவார்


AD 50

தகவல்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்



**விண்ணக வாழ்வின்**
**1ம் ஆண்டு நினைவு அஞ்சலி**

மலர்வு
19
02
1977



உதிர்வு
21
07
2014

AD 52

**பொனிப்பாஸ் தர்மசீலன்**

"நீதிமான்களின் ஆன்மாக்கள்
கடவுளின் கையில் உள்ளன.
வேதனைகள் எதுவும் அவர்களைத் தீண்டாது"

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவில் மரிய கொரற்றி மன்ற விழா



நெடுந்தீவுப் பங்கில் தூய மரிய கொரற்றி மன்றமானது பல ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. விடலைப் பருவ மாணவிகளின் ஆன்மீக வளர்ச்சியை முதல் நோக்காகக் கொண்டு, தூய மரிய கொரற்றியை முன் மாதிரிகையாகக் கொண்டு ''உயிரினும் மேலாக உயிரையே'' என்னும் விருதுவாக்கோடு இம் மன்றமானது செயற்படுகின்றது. நெடுந்தீவின் பங்குத்தந்தை அருட்தந்தை நேசநாயகம் அடிகளாரைப் போசகராகக் கொண்டு, அவரின் நேரடி வழிகாட்டலிலும் நெறிப்படுத்தலிலும் இம் மன்றமானது சிறப்பாக இயங்கி வருகின்றது. மேற்படி மன்றத்தில் 15 மாணவிகள் அங்கத்துவம் வகிக்கின்றனர். இவர்கள் தமது பாதுகாவலியின் திருநாளை 05.07.2015 (ஞாயிறு) அன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர். அன்றைய நாள் காலை 6.30 மணிக்கு திருவிழா சிறப்புத் திருப்பலியை நெடுந்தீவுப் பங்கின் உதவிப் பங்குத்தந்தை நிக்சன் கொலின் அடிகளார் நிறைவேற்றினார். திருப்பலி நிறைவில் பங்குமக்கள் அனைவருக்கும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. பங்குமக்கள் தமது வாழ்த்துக்களை மன்ற அங்கத்தினருக்குத் தெரிவித்தனர். தொடர்ந்து ஒவ்வொரு ஆலயங்களிலும் இருந்து அழைக்கப்பட்ட ஆலயப் பிரதிநிதிகளுடன் மன்ற அங்கத்தவர்களும் இணைந்த ஒரு சிறிய ஒன்று கூடல் நிகழ்வு மிகவும் எளிமையாக நடைபெற்றது. அன்றைய நாளின் நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற மன்ற அங்கத்தவர்கள் அனைவரும் பங்குத்தந்தையோடு இணைந்து ஒழுங்குபடுத்தியிருந்தனர். தூய மரிய கொரற்றி மன்ற அங்கத்தவர்கள் எல்லோரும் ஒரே வடிவ ஆடையுடன் திருவிழாவிலும் நிகழ்விலும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

The Founding of St. Patrick's - In Retrospect என்னும் கட்டுரை இதனை உறுதி செய்வதோடு மொன்சின்ஞோர் ஓராட்சியோ பெற்றக்கினி என்பவரால் இது நிறுவப்பட்டு யாழ். மரியன்னை பேராலய பொதுநிலையினரால் இயக்கப்பட்டு வந்தது என்பதும் ஆதாரங்களோடு சுட்டிக்காட்டப்படுகிறது. கடந்த 2000ம் ஆண்டு இலங்கை அரசாங்கத் தபால் திணைக்களத்தினால் கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவை யொட்டி ஒரு தபால் தலையும் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு தனது 150வது ஆண்டு நிறைவைப் பூர்த்திசெய்யும் கொழும்பு, கொட்டாஞ்சேனை புனித. பெனடிக்ற் கல்லூரிதான் இலங்கையின் முதலாவது கத்தோலிக்க ஆங்கிலப் பாடசாலை எனக் கொழும்பு உயர் மறைமாவட்டத்திலிருந்து வெளிவரும் The Messenger என்னும் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது காரணமாகவே இச்செய்தியைப் பிரசுரிக்கிறோம்.

## தங்கள் வாழ்வை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணீர் சிந்தத் தெரியவில்லையென்றால், பிறரோடு சேர்ந்து எப்படி மகிழ்வது என்றுகூடத் தெரியாமல் இருந்தால் வாழ்வது எப்படி என்பதை நாம் அறியாமல் இருக்கிறோம். இவ்வாறு கூறிய திருத்தந்தை இதய மாற்றத்திற்காக இளையோருடன் சேர்ந்து செபித்தார்.

இயேசுவே, இவ்வுலகில்
எத்தீமைக்கும் அடிமையாகாதபடிக்கு
விடுதலை அடைந்த ஓர் இதயத்தை
அருளும். வசதியான வாழ்வுக்கும், தீய
பழக்கங்களுக்கும், போலியான
விடுதலைக்கும், நாங்கள் விரும்புவதை
யெல்லாம் விரும்பும் இடத்தில் எல்லாம்
செய்வதற்கு அடிமையாகும் வாழ்வை
அல்ல, உண்மையான விடுதலை
அடைந்த இதயத்தை அருளும்
எனச் செபித்தார்.

## புனித டொன் பொஸ்கோ பாடசாலை வாசல் வளைவு



யாழ். றக்கா வீதியில் அமைந்துள்ள புனித டொன் பொஸ்கோ பாடசாலையின் 60 ஆண்டுகள் நிறைவையொட்டி அதன் பிரதான வாசலில் அமைக்கப்பட்ட வாசல் வளைவு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

## மருதமடு மாதாவே!...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். அடைக்கல அன்னை ஆலயத்திற்கு மடு அன்னையின் திருச்சுரூபம் வந்தபோது இப்பாடல் உருவாக்கப்பட்டதால் பின்வரும் அடியும் இணைந்திருந்தது.

*அடைக்கலத்தாய் ஆலயம் உன்*
*அருள் சொரிய வந்தனயோ*


*கடைக்கண்ணால் பார்த்*
*ஆதரிப்பாய் காரணியே! பூரணியே!*

ஆயினும், பின்னர் மடு கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டபோது மேற்படி அடி பொருத்தமில்லாததால் நீக்கப்பட்டது. திரு. யோசப் அன்ரூ அவர்கள் யாழ். அடைக்கல அன்னை ஆலய வாத்தியக் கருவி மீட்டுனராகவும் பாடகர் குழாம் பொறுப்பாளராகவும் இருந்த காலத்தில் அடைக்கலமே! ஆடைக்கலமே! தாயே..., ஆதாரம் என்றுனது பாதார விந்தமதை... ஆகிய பாடல்கள் உட்பட மேலும் பல பாடல்களையும் உருவாக்கியிருந்தார் என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டிய தொன்றாகும்.

## தவறுக்கு வருந்துகிறோம்

கடந்த 05-07-2015 வெளிவந்த *பாதுகாவலன்* இதழில் அருட்தந்தை கு. யே. அன்ரனி பாலா அடிகளாரால் எழுதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட *திருவழிபாடும் திரு இசையும்* என்ற கட்டுரையில் *மருதமடு மாதாவே* என்ற பாடல் காலஞ்சென்ற அருட்தந்தை. S.A. மைக்கல்சாமி அவர்களால் இயற்றப்பட்டது என்ற தவறான கருத்து இடம்பெற்றதையிட்டு எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். இக்கருத்து தவறானது என்பதையும் இப்பாடல் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தைச் சேர்ந்த திரு. யோசப் அன்ரூ அவர்களாலேயே உருவாக்கப்பட்டது என்பதையும் கட்டுரையின் ஆசிரியர் ஏற்றுக்கொள்கிறார். இத்தவறான கருத்தால் யாருடைய மனதையாவது யாம் புண்படுத்தியிருந்தால் அதற்காக வருந்துகிறோம்.

ஆசிரியர்


ஜூலை 15, 2015

"நமது எண்ணங்களை மாற்றும் நேரம் இது;
உலகில் பசியால் துன்புறுவோர்,
நமது செயல்பாடுகளால் பாதிக்கப்படுவதில்லை
என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும்
எண்ணங்களை நிறுத்தவேண்டும்"

திருத்தந்தை மறையுரைகள் | www.facebook.com/reflectionsbypopeintamil


## முன்னோக்கிச் செல்லுங்கள், சாத்தான் உங்களைப் பிரித்துவிடாதபடிக்கு எச்சரிக்கையாக இருங்கள்

பரகுவாய் நாட்டிற்கு விஜயம் செய்த திருத்தந்தை அங்கு ஒப்புக்கொடுத்த திருப்பலியின் மறையுரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். முன்னோக்கிச் செல்லுங்கள். சாத்தான் உங்களைப் பிரித்துவிடாதபடிக்கு எச்சரிக்கையாக இருங்கள். விசுவசிக்க வேண்டுமென்று கிறிஸ்தவர்கள் எவரையும் கட்டாயப்படுத்த முடியாது. அதே நேரம், பிறரோடு ஒருமைப்பாட்டுணர்வில் வாழ்வதையும், பிறரை அன்புகூர்வதையும், பிறரை வரவேற்பதையும் கிறிஸ்தவர்கள் நிறுத்த வேண்டுமென்று யாரும் அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது என்றும் கூறினார் திருத்தந்தை.

திருப்பலி நிறைவேற்றிய பின்னர், அதில் கலந்துகொண்ட ஆர்ஜென்டீனா அரசுத்தலைவர் கிறிஸ்டினா மற்றும் புவனோஸ் ஐரெஸ் கிரேக்க ஆர்த்தாடக்ஸ் தலைவரையும் வாழ்த்தினார். திருப்பலிக்குப் பின்னர் அன்னைமரியிடம் செபித்து, பரகுவாய் மக்களின் அன்னை மரியா பக்தியைப் புகழ்ந்து, பரகுவாய் நாட்டை அர்ப்பணித்தார். பரகுவாயில் திருத்தந்தை எவ்வளவு தூரம் அன்புகூரப்படுகிறார் என்பதை அறிகிறேன், உங்களுக்காகச் செபிக்கிறேன், இப்பொழுது மூவேளை செபத்தைச் செபிப்போம் என்று கூறிச் செபித்தார் திருத்தந்தை. அனைவருக்கும் ஆசீர் அளித்து திருப்பீடத் தூதரகம் சென்று ஆயர்களைச் சந்தித்தார். அவர்களோடு மதிய உணவு அருந்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## பாதுகாவலன் வாசகர்கள், எழுத்தாளர்கள் கவனத்திற்கு...

பாதுகாவலனில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள், மற்றும் ஆக்கங்களில் தெரிவிக்கப்படும் கருத்துக்களுக்கு அதனை ஆக்கியவர்களே பொறுப்பாவார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள் கிறோம்.

ஆசிரியர்


## 5ம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 21 • 10 • 1935



உதிர்வு 16 • 07 • 2010

**பிரான்சிஸ் கிறிஸ்ரி வேதநாயகம்**

மாற்ற முடியாத நியதி என்று
மண்விட்டுச் சென்றனையோ
ஆண்டுகள் நீண்டாலும்
மறையாத உம் நினைவுகளோடு...

AD 49

இல. 07, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்

மனைவி, பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்



J. றொகான்
அவர்களின்
தயாரிப்பில்
உள்ளூர்
இசைக்கலைஞர்களின்
ஆற்றல்களோடு
உருவான கிறிஸ்தவப்
பாடல்கள் அடங்கிய
**பலி அவன்**
என்னும் இசை
இறுவட்டு கடந்த
12.07.2015 அன்று
திருமறைக் கலாமன்ற
கலைத்தூது
மண்டபத்தில்
வெளியிட்டு
வைக்கப்பட்டது.





இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2015ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org